பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU- National Tamil Daily

மலர் 27 ஆடி 9 ஜுலை 5 இதழ் 164

யாழ்ப்பாணம் புதன்கிழமை 24-7-1985

## ஆயுதப்படைகளின் அத்துமீறலால்——

# நிலைமை சீர்கேடுற்றால் அரசுதான் பொறுப்பு

### சென்னையில் அமிர் கருத்து

(சென்னை)

"இலங்கையில் போர் நிறுத்த உடன்பாட்டை ஆயுதப்படையினர் கண்டிப்புடன் பின்பற்றுமாறு செய்ய இலங்கை அரசு தயாராக இல்லாவிட்டால் அங்குள்ள நிலவரம் ஏதும் சீர்கேடு அடைந்தால் அதற்கான முழுப்பொறுப்பை இலங்கை அரசே ஏற்க வேண்டும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு அ அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து நிகழ்ந்துவரும் வன்முறைச் சம்பவங்கள், இலங்கையின் இன பிரச்சனைக்கு நிரந்தரமான அமைதியான தீர்வுகாண இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி எடுத்து

(9-ம் பக்கம் பார்க்க)

### எம். ஜி. ஆர். ஜாப். செல்வார்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் ஜப்பான் செல்லவுள்ளதாக தமிழக மாநில அரசு அதிகாரி ஒருவர் நேற்று சென்னையில் தெரிவித்தார்

[9-ம் பக்கம் பார்க்க]

அவுஸ்திரேலிய பெண்மணி எழுதியுள்ள

# தமிழர் பிரச்னை பற்றி 483 பக்கங்களில் நூல்!

## உலகெங்கும் பலத்த வரவேற்பு

(கொழும்பு)

**இலங்கைத் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்தும், இன்றைய அவர்களின் நிலையை விளக்கியும் அவுஸ்திரேலிய பெண்மணி ஒருவர் 483 பக்கங்கள் கொண்ட நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.**

அவுஸ்திரேலிய 'லோ ஏஸியா' நிறுவனத்தின் மனித உரிமைகள் குழுவுக்குப் பொறுப்பாகவுள்ள செல்வி பெட்றீஷியா ஹைமன்ட் என்பவரே இந்நூலின் ஆசிரியர். இலங்கைத்தமிழர்பிரச்னை சம்பந்தமாக மூன்று ஆண்டுகள் ஆராய்ந்தபின் இந்நூலை அவர் எழுதியுள்ளார்.

இந்நூலின் பிரதிகள் உலகம் பூழுவதிலுமுள்ள பிரபல நீதிவான்கள், சட்டநிபுணர்களுக்கும், உலகத் தலைவர்கள், பிரமுகர்களுக்கும் இந்நூல் அனுப்பப்பட்டு வருகின்றது


20 அவுஸ்திரேலிய டாலர்களுக்கு வழங்கப்படும் இந்நூலுக்கு நல்லவரவேற்பு இருப்பதாகவும், விசேஷமாக சிங்களவரோ தமிழரோ அன்றி அவுஸ்திரேலியர் ஒருவரால் எழுதப்பட்டுள்ளமையால் இந்நூலில் பாரபட்சமற்ற கருத்துக்கள் இருக்குமென்று நம்பப்படுகின்றது.

இலங்கைத்தமிழரின் சரித்திரம், அரசியல் போராட்டம் வட்டமேசை மாநாடு, மனித உரிமை மீறல்கள், அரசியல் திட்டத்தின் ஆறாவது திருத்த மூலம் பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டமை. 1982-ம் ஆண்டு நடந்த சர்வஜன வாக்கெடுப்பு 1977 - 1983 இனக்கலவரம் 1980 - 1981-ம் ஆண்டு கலவர சம்பவங்கள் மற்றும் திம்பு மகாநாடு போன்ற அம்சங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

உலக நிறுவனங்கள் பலவும் இந்நூலை வரும்பிவாங்குவதாகவும் கூறப்படுகிறது

சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த செல்வி பெட்றீசியா ஹைமன்ட் மலை

(10-ம் பக்கம் பார்க்க)



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஒரு பிரிவான ஆயுதம்தரித்த மக்கள் விடுதலை இராணுவத்தினர் யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு முன் இலங்கை ஆயுதப்படைகளை எதிர்த்து தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கான திட்டம் ஒன்றைத் தீட்டிக்கொண்டிருக்கும் காட்சி ('புறன்ட் லைன்' என்ற இந்திய சஞ்சிகையில் வந்த புகைப்படம்)

இன்று முதல்

## மூன்று தினங்கள் பூரண ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

"விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் மறக்கமுடியாத இருள்சூழ்ந்த கொடிய நாட்களை நினைவுகூருமுகமாகவும், ஆட்சியாளரின் நடவடிக்கைகளைக் கண்டிக்குமுகமாகவும் நாளையும் நாளைமறுதினமும் 25ம், 26ம் திகதிகள்)

(10-ம் பக்கம் பார்க்க)

காரைநகரில் கைதான

## இளைஞர் இருவரும் யாழ். கோட்டைக்குள்

### பெற்றோர் சந்திக்கவும் வசதி

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களும் பாதுகாப்புக் கருதி யாழ் கோட்டைக்குள் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு இளைஞர்களையும் இம்மாதம் 27ந் திகதி அவர்களது பெற்றோர் அங்கு சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க

(9ம் பக்கம் பார்க்க)

## மெயிலில் கொழும்பு சென்ற 2 மோட்டார் வாகனங்கள் மிருசுவிலில் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற மெயில் ரயிலில் வைக்கப்பட்டிருந்த இருவாகனங்கள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு மிருசுவில் புகையிரத நிலையத்தில் வைத்து இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

யாழ். ரயில் நிலையத்திலிருந்து பூபாலசிங்கம் வெள்ளவத்தை' என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஸ்கூட்டரும், சாவகச்சேரி ரயில் நிலையத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளுமே கொள்ளை அடிக்கப்பட்டவை. [மா]

ஆயுதப்படை நடமாட்டத்தால்

## பூநகரி பகுதியில் மக்கள் பதற்றம்

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் ஆயுதப் படையினர் இரவுபகலாக ரோந்து சுற்றுவதால் அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கவசவண்டிகள் சகிதம் ஆயுதப்படையினர் வீதிகளில் கால்நடையாக நடந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடிசைத் தொழிலாக கால்நடைகள், கோழி வளர்ப்புகளில் ஈடுபட்டுவந்த இப்பகுதி

(9-ம் பக்கம் பார்க்க)

## பஸ் பருவகாலச் சீட்டுக்கள்

(யாழ்ப்பாணம்)

வ. பி போ. வ சபையில் வயதுவந்தோருக்கான பருவகாலச்சீட்டுகள் (ஆகஸ்ட் மாதத்துக்கானவை) இம்மாதம் 26-ம் திகதி தொடக்கம் யாழ் பஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

[9-ம் பக்கம் பார்க்க]

### உரும்பராய் சிறுவன் மரணம்:

## "அடித்தேன்; ஆனால் கொலைசெய்யும் நோக்கமில்லை"

### நீதிமன்றில் அண்ணன்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் வேலைக்காரச் சிறுவன் ஜெகேந்திரன் மரண விசாரணையில், இறந்தவரின் அண்ணனை சந்தேகநபர் குப்புசாமி காந்தரூபனை யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலை இல்லாத காரணத்தினால், விளக்கமறியலில் வைக்க முடியாத நிலையில் 10 000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். பிணை எடுக்க எவரும் இல்லாததினால் சொந்தப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவ் விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ் நாகராசா முன்னிலையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

(9-ம் பக்கம் பார்க்க)

## தனிமையிலிருந்த பெண்ணின் தாலிக்கொடி அபேஸ்!

(யாழ்ப்பாணம்)

மூன்றுவயதுக் குழந்தையுடன் தனிமையில் வீட்டில் இருந்த பெண் ஒருவரிடம், இனந்தெரியாத இளைஞர் ஒருவர் துப்பாக்கி முனையில் இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லிப் பயமுறுத்தி சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதிபான தாலிக்கொடியைக் கொள்ளை அடித்துச்சென்றுள்ளாராம்

கொக்குவில்மேற்கு சொர்ணவடலி என்னுமிடத்திலுள்ள தர்மேஸ்வரி மாதவன் (22 வயது) என்பவரின் வீட்டி

[9ம் பக்கம் பார்க்க]

### உப்புவெளியில் சம்பவம்:

## பொலிஸ் கொன்ஸ்டபிள் சுட்டுக் கொலை

### மற்றொருவருக்கு காயம்

(திருகோணமலை)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ராஜபக்ஷ கெதர (வயது 35) இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம்மாலை 7 மணியளவில் இடம்பெற்றது. இச் சம்பவத்தில் இதே பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரத்தினம் என்பவர் படுகாயமடைந்தார்.

[9-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

கோழிப்பண்ணையை மேற்பார்வை செய்ய நல்ல திறமையும் முன் அனுபவமும் உள்ள ஒருவர் தேவை. வயது 35க்கு மேல் இருக்கவேண்டும் தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4594, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (4594)

நல்லநிலையில்உள்ள வீடியோ டெக் உடன் தேவை. ஹிற்ருச்சி, ஜெவிசி, அக்காயி, மிற்சுபிஸி, நோமென்டி, நஷனல் 8600 நேரடியாக தொடர்பு கொள்ளவும். ஸ்ரான்லி மினி யாழ்ப்பாணம் 4622

தொகையாக வேப்பம்விதைகளும் இலுப்பம் விதைகளும் தேவை, தொடர்பு கொள்ளவும்:- த. பெ. 77, மில்க்வைற் யாழ்ப்பாணம். 4626

## தேசிய சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

எல்பிட்டியாவில் நேற்று முன் தினம் இழுக்கப்பட்ட 1006 வது தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:

**04 B 0202**

1, 95 400 ரூபா

2-வது பரிசு:

**17 Z 0099**

73.275 ரூபா

3-வது பரிசு:

**12 D 0120**

24,425 ரூபா

ரூபா 879.30 பரிசு பெறும் 1(0 ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 12 A 0231 | 14 A 0030 |
| 15 A 0307 | 16 A 0628 |
| 05 B 0591 | 06 B 0345 |
| 05 C 0677 | 08 C 0241 |
| 08 C 0570 | 11 C 0357 |
| 03 D 0183 | 06 D 0605 |
| 08 D 0242 | 18 D 0838 |
| 08 E 0612 | 15 E 0250 |
| 16 E 0533 | 18 E 0312 |
| 03 F 0704 | 10 F 0385 |
| 05 G 0097 | 06 G 0753 |
| 08 G 0123 | 08 G 0827 |
| 09 G 0379 | 13 G 0942 |
| 14 G 0240 | 15 G 0039 |
| 15 G 0996 | 17 G 0422 |
| 02 H 0737 | 02 H 0917 |
| 10 H 0184 | |
| 17 J 0446 | |
| 10 K 0884 | 10 K 0995 |
| 14 K 0486 | 15 K 0444 |
| 03 L 0911 | 08 L 0422 |
| 03 M 0562 | 06 M 0924 |
| 10 M 0664 | 13 M 0312 |
| 13 M 0439 | 17 M 0137 |
| 18 N 0870 | |
| 11 O 0293 | 13 O 0730 |
| 14 O 0664 | 17 O 0216 |
| 19 O 0804 | |
| 02 P 0815 | 08 P 0114 |
| 10 P 0309 | 10 P 0935 |
| 14 P 0198 | 14 P 0870 |
| 16 P 0913 | |
| 10 Q 0480 | 10 Q 0604 |
| 11 Q 0745 | 19 Q 0904 |
| 22 Q 0078 | |
| 13 R 0244 | 20 R 0204 |
| 04 S 0143 | 05 S 0887 |
| 17 S 0301 | |
| 06 T 0983 | 07 T 0264 |
| 15 T 0150 | |
| 02 U 0616 | 04 U 0994 |
| 05 U 0698 | 07 U 0150 |
| 08 U 0811 | |
| 05 V 0811 | 05 V 0257 |
| 14 V 0313 | 19 V 0054 |
| 07 W 0061 | 12 W 0730 |
| 13 W 0751 | 14 W 0845 |
| 17 W 0115 | |
| 07 X 0813 | 07 X 0881 |
| 10 X 0830 | 14 X 0457 |
| 22 X 0006 | |
| 06 Y 0680 | 06 Y 0992 |
| 14 Y 0273 | |
| 05 Z 0761 | 08 Z 0983 |
| 09 Z 0145 | 11 Z 0935 |
| 13 Z 0771 | 16 Z 0287 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை.

## விற்பனைக்கு

றேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ, டெக் இவற்றின் உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**சித்ரா ரெக்ரைலீஸ்**

(ரெலிகோணர் கிளை)

159, மின்சாரநிலைய வீதி, நவீனசந்தை,
யாழ்ப்பாணம். 4633

உங்கள் மூலதனத்திற்கு கொடுக்கப்படும்

## வட்டி விகிதங்கள்

| | |
|---|---|
| மூன்று மாதம் 18% | தொடக்கம் 20% வரை |
| ஆறு மாதம் 21% | தொடக்கம் 23% வரை |
| ஒரு வருடம் 22% | தொடக்கம் 25% வரை |

உங்கள் காணியை இலகுவாக வாங்கவும் விற்கவும் எங்களை நாடுங்கள்.

விபரங்களுக்கு:

**Jaffna Property Trades Ltd.,**

3, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
போன்: 23698

## எமது புதிய வெளியீடு

ஸ்ரீதரின்

சுரேஷ், அனிதா நடித்த

"உன்னைத் தேடி வருவேன்"

**வீடியோ பிரசாத்,**

49, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

## ஓராண்டு நினைவஞ்சலி

### திரு. வ. இராமலிங்கம்

சுதுமலை மேற்கு

விற்பனைத் திணைக்களத்தின் வடபிராந்திய உள்ளகக் கணக்காய்வுக் கிளையில் சேவை ஆற்றி 3-8-1984ல் இவ்வுலகை நீத்த திரு. வ. இராமலிங்கம் அவர்களை முதலாவது சிராத்த தினத்தில் நினைவுகூருகின்றோம்.

வடபிராந்திய உள்ளகக் கணக்காய்வுக் கிளை
உத்தியோகத்தர்கள்.
விற்பனைத் திணைக்களம், சுன்னாகம்.
(4624)

## 2-ம் வருட நினைவஞ்சலி

1983 இருண்ட ஆடிக் கலவரத்தின்போது மானிப்பாயில் அகாலமரணமடைந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவனும், மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவனுமாகிய



மகாதேவா
இராஜகாந்தன்
(பவுண்)

மலர்வு:
26–03–1964

உதிர்வு:
24–07–1983

மண்ணில் வந்தோரெல்லாம் மடிவது நிஜம். ஆனாலும் இளவயதில் என்னைவிட்டுப் பிரிந்த அன்பு அண்ணா! என்னை தவிக்கவிட்டு நீ தனிவழி சென்றுவிட்டாயே. இதயம் நிறைய அன்புவைத்து இடைவழியில் பிரிந்தாயே அண்ணா! நீ சென்ற வழிபார்த்து செயல் இழந்து நிற்கிறேன். படிக்கச் சென்ற உன்னை பாடையில் ஏற்றிய பகைவர்கள் பாவிகளாகட்டும். உனது ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இலட்சிய வெறியுடன் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன்.

உன் பிரிவால் வாடும்
தங்கை
ம. இராஜலோஜினி (ராணி).

சண்டிலிப்பாய்-வடக்கு,
சண்டிலிப்பாய். 4542

## ஒட்டல் சீவம்ஸ்

கொழும்பில் எல்லா வசதிகளுடன் தங்குவதற்கு நியாயவாடகையில் அறைகள் கொடுக்கப்படும்.

தொடர்பு:

**சீவம்ஸ் எக்ஸ்போட்ஸ்,**

19, சங்கமித்த மாவத்த
கொழும்பு - 13.
தொலைபேசி: 26522 (4640)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கனகரத்தினம் கிருஷ்ணானந்தம்
(உரிமையாளர் ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், நல்லூர்)



மலர்வு:
19-5-1950

உதிர்வு:
24-7-1983

திதி:
31-7-1985

எம்மை பாசத்தால் அன்பால் பண்பால் வாழ்வித்து, வளமாக்கி இதயம் நிறைந்த அன்புடன் மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து 2 ஆண்டு சென்றாலும் நீ செய்த அன்புச் செயல்களெல்லாம் எங்கள் கண்முன்னே ஒளியாய் திகழ்ந்து கொண்டே இருக்கின்றன. எங்கள் உள்ளமெல்லாம் குடிகொண்டுவிட்ட ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லைக்கந்தனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மகன், பெற்றோர்,
சகோதர, சகோதரிகள், உறவினர்கள்.

2, கந்தபுராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 4611

## ஈராண்டு நினைவஞ்சலி

### செல்வன் க. தர்மகுலசிங்கம் (ஜெயம்)

(முன்னாள் புலோலி ப. நோ. கூ. சங்க பணியாளர்)



வந்து உதிப்பு
07-09-1953

★

ஆண்டவனழிப்பு
25-07-1983

குருதிப் புனலில் குளித்தாலும் கொள்கை
கருதியே வாழும் குலமே — பெருகியே
ஓடுமெம் கண்ணீர் ஒருநாள் — ஜெயமாய்
நாடுமுன் பாதச் சுவடு.

ஐயாவையும் ஆசை மருமகன் அரவிந்தனையும் அழைத்துவிட்டாய். ஆற்றுமல் உங்கள் அனைவர் பிரிவாலும் வாடும்!

—அம்மா, சகோதரர்கள், அத்தான், அக்கா,
மருமக்கள், மற்றும் உறவினர்கள், நண்பர்கள்,
கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர்,
புலோலி ப. நோ. கூ. சங்க பணியாளர்கள்.

அன்னாரின் இறுதிச்சடங்கின் போது சகல வழிகளிலும் ஒத்தாசை வழங்கிய அனைத்து பல. நோ. கூ. சங்க நிர்வாகத்தினருக்கும் பணியாளர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாளம்பை, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
4617

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

### அவசரகாலச் சட்டத்தை வாபஸ்பெறும்படி

# தென்னாபிரிக்க அரசுக்கு ஐரோப்பிய

# பொருளாதார சமூகம் எச்சரிக்கை!

லண்டன், ஜூலை—23

**அவசரகாலச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெறும்படி ஐரோப்பிய பொருளாதார சமூகம் (ஈ ஈ சி.) தென்னாபிரிக்க அரசை வேண்டியுள்ளது. இவ்வேண்டுகோள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் தென்னாபிரிக்க அரசுமீதான கடும் எச்சரிக்கை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த சனிக்கிழமை தென்னாபிரிக்காவில் அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டதையடுத்து அங்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளன. இதனையடுத்தே ஐரோப்பிய பொருளாதார சமூகம் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுமானால் தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத் தடை கொண்டுவரப்படுமென ஈ ஈ. சி. எச்சரித்துள்ளது.

அத்துடன் அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்கி வெள்ளையரல்லாத உண்மையான கறுப்பர் இனத்தவரின் பிரதிநிதிகளுடன் சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படியும் இந்த அமைப்புக் கேட்டுள்ளது.

இதேவேளை தென்னாபிரிக்காவில் வன்முறைக் கலகங்கள் மிக மோசமாகக் கறுப்பினத்தவர் வாழும் பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்ததுமுதல் இதுவரை சுமார் 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர் 200க்கும் அதிகமானவர்கள் கைதாகியுள்ளனர்.

தென்னாபிரிக்க அரசின் இந்த அவசரகாலச் சட்டத்தை பொதுநலவாய அமைப்பின் செயலாளர் திரு. ஸ்ரீதத்ரம்பாலும் வெகுவாகக் கண்டித்துள்ளார்.

''இச்சட்டத்தைக் கொண்டு வந்ததன்மூலம் தென்னாபிரிக்க அரசு ஒரு பயங்கரவாதியாக மாறியுள்ளது'' என்று அவர் வர்ணித்துள்ளார்.

தொடர்ந்து அவர், பிரச்னைகளைக் கட்டுப்படுத்துவதைத் தவிர்த்து இச்சட்டத்தின் மூலம் நிலைமைகளைத் தென்னாபிரிக்க அரசு மேலும் சிக்கலாக்கிவிட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தென்னாபிரிக்கக் கறுப்பர்களின் விடுதலைப் போராட்ட அமைப்பான 'ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ்', ''புதிய அவசரகாலச் சட்டம் தென்னாபிரிக்க இன ஒடுக்கல் வெள்ளையர் அரசின்வீழ்ச்சியைக் காட்டுவதாக அமைந்துள்ளது'' என்று ஐ. நா. வில் தெரிவித்துள்ளது. (கி)

## கொடூர வறட்சியின் பின்

# எத்தியோப்பியாவில் மழைப்பொழிவு ஆரம்பம்!

### பிரி அமைச்சர் தகவல்

லண்டன், ஜூலை-23

கடந்த ஒரு வருடகாலமாக வறட்சியின் கொடூரப் பிடியினுள் சிக்கியிருந்த எத்தியோப்பியாவின் பல இடங்களில் தற்போது மழைபெய்ய ஆரம்பித்துள்ளது இத்தகவலை பிரிட்டனின் வெளிநாட்டு உதவிகளுக்கான அமைச்சர் திமோத்தி ரெய்சன் தெரிவித்தார்.

எத்தியோப்பியாவுக்கான பிரிட்டனின் பட்டினி நிவாரண வேலைகளை திரு. ரெய்சன் நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர் அவர் நாடு திரும்பி பாராளுமன்றில் நேற்று அதுகுறித்து அறிக்கை வெளியிடபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. ரெய்சன் மேலும் கூறியதாவது:-

''எத்தியோப்பியாவில் கடும் வறட்சிக்குள்ளாகியிருந்தபகுதிகளில் மழைபெய்ய ஆரம்பித்துள்ளது. இதனால் அங்கு நீண்டகாலமாக இருந்துவந்த கொடிய வறட்சியும், அதனால் நிலவிய அசுர பட்டினி நிலைமையும் நீங்கிவிடும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

மழைப் பொழிவு இடம்பெறும் இடங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. கால்நடைகளும் அவற்றின் பாதிப்புக்களிலிருந்து சீரடையத்தொடங்கியுள்ளன' என்றார்

இதேவேளை பிரிட்டனின் இரு 'ஹேர்குலிஸ்' விமானப்படை விமானங்களும் எத்தியோப்பியாவில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருப்பதையும், பாதைகள் மற்றும் ஏனைய போக்குவரத்து வசதிகள் சீராக இல்லாததால் அவ் விமானங்களை அடுத்தாண்டுவரை அங்கு வைத்திருக்க வேண்டி வரும் என்றும் அவர் கூறினர். (சி)

## பாக். காஷ்மீரில் குழந்தைகளுக்கு விநோதநோய்!

(காஷ்மீர்)

பாகிஸ்தான் வசமிருக்கும் காஷ்மீர் எல்லைப்பகுதியில் குழந்தைகளுக்கு ஒரு விநோத நோய் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நோயின் காரணமாக இதுவரை 60 குழந்தைகள் குருடாகியிருக்கின்றனர்

இந்த நோய் காட்டுத்தீ போல் பரவி வருவதாகக் கூறப்படுகிறது.

சத்திர சிகிச்சை மூலம் இந்த நோய் குணப்படுத்தமுடியும் என்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்திருந்தனர்.

### சகோதரனின் மரணச்சடங்கு——

# பாக்வரும் பூட்டோ மகளுக்கு கூடுதல் பாதுகாப்பு!

இஸ்லாமாபாத், ஜூலை-23

பூட்டோவின் மகன் ஷாநவாஸின் மரணச் சடங்குகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை லர்க்னாவில் இடம்பெறவுள்ளன.

பிரான்ஸிலிருந்து ஷாநவாஸின் பூதவுடலுடன் அவரது சகோதரியும், மக்கள் கட்சியின் துணைத் தலைவருமான பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தான் வரவுள்ளார்.

பாகிஸ்தானில் பெனாஸிர் பூட்டோவுக்குக் கூடுதல் பாதுகாப்பை வழங்க பாகிஸ்தான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது

இதேவேளை பெனாஸிரின் மக்கள் கட்சியைச் சேர்ந்த பல சிரேஷ்ட உறுப்பினர்களை பாகிஸ்தான் அரசு ஷாநவாஸின் மரணச் சடங்குகளில் கலந்துகொள்ளாதவாறு கைது செய்துள்ளது மேலும் பலருக்கு சிந்து மாகாணத்தினுள் பிரவேசிக்கவும் பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது.

27 வயதான பூட்டோவின் இளைய மகன் ஷாநவாஸின் மரணம் தொடர்ந்து மர்மமானதொன்றாகவே காணப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை பிரான்ஸிலுள்ள தமது இல்லத்தில் படுக்கையறையில் அவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார் (கி)

# ராஜீவ், லோங்கோவால் முதல்தடவையாக சந்திப்பு!

புதுடில்லி, ஜூலை 23

சீக்கிய 'அகாலிதள்' கட்சித்தலைவர் சன் ஹர்ச்சன் சிங் லோங்கோவாலுக்கும், பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்குமிடையே இந்திய பாராளுமன்றில் சமரசப்பேச்சுக்கள் நடக்க ஏற்பாடாகியுள்ளது.

சீக்கியர்களுக்கும், இந்திய அரசுக்குமிடையிலான பிணக்குகளைத் தீர்க்கும் ஒரு நடவடிக்கையாகவே இப்பேச்சுக்கள் இடம் பெறவுள்ளன

திரு. ராஜீவ்காந்தி இந்தியப் பிரதமமந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டதையடுத்து முதல்தடவையாக அகாலிதள் தலைவர் லோங்கோவாலைச் சந்

(9-ம் பக்கம் பார்க்க)


## உயர் விளைச்சலை நீங்கள் பெறவேண்டுமா?

# பேத்திரோய்ட் ஈசி 050

**விலை** 50 மி.லீ. ரூபா 70/- 100 மி.லீ. ரூபா 130/-

**இலை உண்ணும் புழுக்கள், வெட்டுப்புழுக்கள், காய்துளைப் புழுக்கள், என்பவற்றை அறவே கட்டுப்படுத்த**

1/2 அவுன்ஸ் /3 கலன் நீர் விகிதத்தில் கலந்து விசிறவும்.

BAYER

# ஹேகெம் லிமிட்டெட்

**உங்கள் விநியோகஸ்தர்கள்:**

யூனியன் ஏஜென்சிஸ் 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

'பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி:

குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவுனியா.

**பாயர் இரசாயனம் இலங்கையின் பெருவிளைச்சலின் உறுதுணை.**

### மணிவாக்கு

களை மலிந்த வயல் கெட்டுப்போவது போல்,
காமம் மிகுந்த வாழ்வும் கெட்டுப்போகின்றது.

— தர்மபதம்

## நமது நோக்கு

# யுத்த நிறுத்தத்தின் விறுத்தம்

மகாத்மா காந்தியை உருவாக்க உதவிய தென்னாபிரிக்கா இன்று அந்நாட்டில் பிறந்து வளர்ந்த கறுப்பர்களை என்னபாடு படுத்துகிறது?

அன்று இந்தியர்களைக் கூலிகள் என்றும், காந்தியைக் கூலிப் பாரிஸ்டர் என்றும் கேலி பண்ணிய வெள்ளையரின் திமிர் நிறைந்தஆட்சிக்கும் இன்று சுமார் 92 வருடங்களுக்குப் பின் ஜனாதிபதி போதா, பிறேற்றோறியாவில் நடத்தும் சுயாட்சிக்கும் என்ன பேதம்?

இந்தியாவைப் பார்க்கும்மிடத்து சுதந்திரமடைந்து 36 ஆண்டுகள் முடிவடைகின்றன. சுதந்திரப் போராட்டத்தில் பிரபல இடம்பெற்ற பஞ்சாப் மாநிலமும், குஜராத் மாநிலமும், மகாத்மா காந்தியின் தீவிரவாதத்துக்கு பெரிதும் உதவிய மாநிலங்கள்.

அதேசமயம் மகாத்மாவின் அஹிம்சைப் போராட்டம் பல குழப்பங்களைக் கண்ட மாநிலங்களும் அவையே!

குறிப்பாக காந்தி பிறந்த குஜராத்தில் அதன் தலைநகரான ஆமதபாத்தில் அவர் நிறுவிய ஆச்சிரமமே தேசமனைத்துக்கும் ஒளிபரப்பிய கலங்கரை விளக்கம். இருப்பினும் ஆமதபாத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களும், விவசாயிகளின் கிளர்ச்சிகளும் கட்டுக்கடங்காத வன்செயல்களில் இறங்கியபோதெல்லாம் உண்ணாவிரதத்தால் அவற்றைக் கட்டுப்படுத்திய பெருமை மகாத்மாவுக்கே உரியது.

இன்று தென்னாபிரிக்காவிலும், சுதந்திர இந்தியாவிலும் ஆட்சிக்கெதிராக நீண்டகாலப் போராட்டம் நடைபெறுகிறது.

தென்னாபிரிக்காவில்நடைபெறுவது இன ஒதுக்கல் என்பதை உலகறிந்திருக்கிறது. உலக அபிப்பிராயம் அதற்கெதிராகத் திரண்டு வருகிறது.

சுதந்திர இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் சுமார் மூன்று மாதங்களுக்கு மேல் மாநில ஆட்சிக்கெதிராக நடைபெறும் போரில் சுமார் 300 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர்.

ஆளுங்கட்சியே முதலமைச்சரை மாற்றி புதிய மந்திரி சபைக்கு அதிகாரம் வழங்கியிருந்த போதும் அமைதி நிலவும் அறிகுறி இன்னும் இல்லை.

தாழ்த்தப்பட்ட சமூகத்தாரும் செடூல்ட் வகுப்பினரும் நிறைந்த மாநிலம் குஜராத். காந்திகாலம்தொட்டு இவர்களின் உரிமைகள் சமனாக வழங்கப்பட வேண்டுமென்பது கொள்கை. இன்று இது அங்கு வாழும் உயர்மட்ட, நடுமட்ட மக்களைப் பாதித்து வருகிறதென எழுந்த போராட்டம் வலுப்பெற்றிருக்கிறது.

இத்தகைய போராட்டம் உள்நாட்டில் நடைபெறுவது இயற்கை; ஆனால் இன்றைய இந்திய ஆட்சியில் காணப்படும் ஒரு தனித்துவ அம்சம் எங்கள் நாட்டில் மருந்துக்குமில்லை எனலாம்.

மூன்று மாதமாக, ஒவ்வொருநாளும் இந்தக் குழப்பத்தை எவ்வாறு தீர்க்கலாம் என்ற பிரயத்தனம் பொதுமக்கள் கவனத்தை ஈர்த்துவருகிறது.

கொள்கையிலிருந்து விலகுவதில்லை என்ற அரசின் பிடிவாதம் நிலைமைக்கேற்றவாறு தளர்த்தப்படுகிறது.

மக்கள் சமாதானக்குழு உதயமாய் விட்டது; எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு உதயமாகிற அறிகுறி தோன்றுகிறது.

இலங்கையில் எழுந்த தமிழர் பிரச்சினை எத்தனை கலவரங்களைக் கண்டது? ஒரு சிறு நாடு 1958 ல், 1977 ல், 1979 ல், 1981 ல், 1983 தொடக்கம் இன்று வரைக்கும் நடைபெற்ற, நடைபெறும் கலவரங்கள் யாவும் தமிழருக்கெதிரானதே!

தெய்வாதீனமோ என்னவோ இவ்வருடத்தில் சிங்களமக்களுக்கும் ஆபத்து என்பது தெளிவானதால் சமாதானம் வற்புறுத்தப்படுகிறது.

போர் நிறுத்தமே அதன் முதற்படியென்றும், சமாதான தீர்வுக்குரிய ரகசியப் பேச்சுக்கள் நான்காவதுபடியென்றும், மொத்தம் எட்டு வாரங்கள் ஒதுக்கப்பட்டன என்ற பிரகடனம் பலருக்கு தெரியவில்லை.

யூன் 18ல் ஆரம்பமான இடபோர் நிறுத்தத்தின் விறுத்தம், ஒரு மாதத்தில் என்ன தோற்றமளிக்கிறது

'போர் நிறுத்தம்' என்பது ஒரு பூச்சாண்டியாகலாம் என்று நாம் எச்சரித்தோம். எமது நாடு வேறு, லெபனான் வேறு என்பதால், காலையில் போர் நிறுத்தம் மாலையில் போர் என்று நாம் கருதவில்லை.

இன்று நடப்பது என்ன? 34வது நாளில் தொடக்குக் கழிவென்றும், மீண்டும் அகால மரணங்கள், பொலிகண்டியில், காரைநகரில் தொடர்ந்துநடைபெறுகின்றன.

கடந்த பல வருடங்களாக அப்பாவி மக்களை, ஆயிரக்கணக்கில் பதம் பார்த்துவரும் இலங்கை ராணுவம் இந்தப் போர் நிறுத்தவேளையிலும் பயிற்சி போதாதென்பதால் இதனைத் தொடர்கிறதா?

இந்த அட்டூழியத்தை முற்றாக நிறுத்த ராணுவத்தை லாயத்தில் பூட்டிவைத்தாலொழிய சமாதானம் கிட்டுவது முயற்கொம்பு.

பூரண சமாதானத்துக்கு இளைஞர் இயக்கங்கள் உறுதுணையாக இருப்பது இன்றியமையாதது.

# கிளர்ச்சிக்காரர்களை அடக்க

## இஸ்ரேலின் உதவி பெறப்பட்டிருக்கிறது

### இந்திய சஞ்சிகைக்கு ஜே. ஆர். பேட்டி

(கொழும்பு)

''சிலபுலனாய்வுத்துறை உத்தியோகஸ்தர்கள், பொறியியலாளர், மற்றும் இரகசியப் பொலிஸார் ஆகியோருக்கு கிளர்ச்சி நடவடிக்கைகளை எதிர்த்து போராடுவதற்கான பயிற்சிகளை இஸ்ரேலியர் மூலம் இலங்கை பெறுகிறது''

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன 'ஜென்றில் மன்' என்ற இந்திய சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அந்த பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

முன்னைய ஆட்சிக் காலத்தில் இலங்கையிலுள்ள இஸ்ரேலிய தூதரகம் மூடப்பட்டது அதன் பின்னர் இங்கு இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அன்றைய நிலையில் இஸ்ரேலியநலன் காக்கும் பிரிவுக்கு வேலையில்லாத காரணத்தினால் அது பின்னர் மூடப்பட்டது இதன்பின்னர் எங்களுக்கு இஸ்ரேலியரின் உதவி தேவைப்பட்டமையினால் அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு அமைக்கப்பட்டது. இலங்கையில் 'மொசாட்' பிரிவினர் இல்லை. இதனை நூறு தடவைகளுக்கு மேல் கூறியுள்ளேன்.

இச்சம்பவம் தொடர்பாக முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அன்றைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு தந்தி ஒன்றினை அனுப்பியிருந்தார்.

பம்பாயில் இருக்கும் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு போன்றுதான் இங்கும் அது அமைக்கப்பட்டுள்ளது என்று நான் அதற்கு தெரிவித்திருந்தேன். பின்னர் அந்த விவகாரம் வெளிப்பட்டது.

### திருகோணமலை அகதிகளுக்கு

# இதுவரை 40 லட்சம் ரூபா அரசாங்கத்தால் ஒதுக்கீடு

[கொழும்பு]

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற கலவரங்கள் காரணமாக அகதிகள் முகாம்களில் தங்கியிருந்தவர்களுக்கு இதுவரை 40 லட்சம் ரூபா பணத்தை சமூக சேவைகள் அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

தற்போது திருகோணமலை மாவட்டத்தில் 36 அகதிகள் முகாம்களில் 18 000 பேர் அகதிகளாகவுள்ளனர்.

குச்சவெளி, கோமரணங்கடவை, கந்தளாய், மூதூர், சேருவில, திருகோணமலை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இந்த அகதி முகாம்கள் உள்ளன

இதேவேளை தற்போது திருகோணமலை மாவட்டத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுககு மாதாந்தம் 15 லட்சம் ரூபா செலவு ஏற்படுகிறதாம். சிலர் தற்போது அகதிமுகாம்களைவிட்டு வெளியேறிவருகின்றனர் இவ்வாறு வெளியேறும் குடும்பம் ஒன்றுக்கு சமூக சேவைகள் அமைச்சு 1000 ரூபா உடனடி உதவு அளிப்பதோடு, இருவாரங்களுக்குத் தேவையான பங்கீட்டு உணவுப் பொருட்களையும் வழங்கி வருகிறது.

### மண்டபத்திலிருந்து 30 குடும்பங்கள் வேறிடத்திற்கு மாற்றம்

[சென்னை]

மண்டபம் முகாமிலிருந்து முப்பது இலங்கை அகதிகள் குடும்பங்கள் ஆற்காட்டிலுள்ள இரத்தினகிரி மலையிலிருக்கும் பாலமுருகன் கல்யாண மண்டபத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சுமார் 125 பேர் அடங்கிய இந்த அகதிகளுக்குத் தேவையான சமையல் பாத்திரங்கள் போன்றவற்றை ஆற்காடு கலெக்டர் திரு. டானியல் வழங்கினார்.

### இலங்கை

## சென்ஜோன் அம்புலன்ஸ் துணைத்தலைவராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவின் துணைத்தலைவராக முன்னாள் வடபகுதி சென் ஜோன் அம்புலன் முதலுதவிப்படை — ஆணையாளர் டாக்டர் ஈ பி இராசையா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் இலங்கை ஆணையாளரான டாக்டர் ஒஸ்வின் பெர்னாண்டோவும் இத்துணைத் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு பிரமுகர்களும் இலங்கை சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவில் நீண்டகாலமாக ஆற்றிய சேவையைக் கௌரவித்த அவர்களுக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் ஒருவர் குறிப்பாக வடபகுதியைச் சேர்ந்த ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

பிரிட்டனிலுள்ள சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப்படையின் தலைமையகம் இந்த துணைத்தலைவர்கள் நியமனங்களை அறிவித்துள்ளது.

இதே வேளை இலங்கையில் இப்படையின் தலைவர்களாக ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவும், திரு. மலரி விஜயசிங்க அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (வி)

## 'ஒக்ஸ்போர்ட்' ஆங்கிலத்துக்கு ஆபத்து?

லண்டன், ஜூலை, 23.

பிரிட்டனில் சிறந்த ஆங்கிலம் எனப்படும் 'ஒக்ஸ்போர்ட் ஆங்கிலத்துக்கு. (Oxford English) அதன் மதிப்புக் குறைவடையும் அபாயம் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மைக்கேல்சுவான் என்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக இலக்கிய வாதி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் இதுபற்றிக் கூறியிருப்பதாவது: ''அமெரிக்காவின் அரசியல், பொருளாதார கலாச்சார செல்வாக்குகளே உயர்ந்த தரமான ஆங்கிலம் எனக்கருதப்படும் ''ஒக்ஸ்போர்ட்'' ஆங்கிலத்துக்கு அபாயத்தை உண்டு பண்ணியுள்ளன.

அமெரிக்க ஆங்கிலம் 'ஒக்ஸ்போர்ட்' ஆங்கிலத்திலிருந்தும் வேறுபட்டதாகும்.

நவீன பொருளாதார விஞ்ஞான சமூக மாற்றங்களினால் தற்போது எழுத்து வேலைக்கு குறைந்தளவு சந்தர்ப்பமே கிடைக்கின்றது.

இதனால் சிறந்த ஆங்கில இலக்கியங்களின் சுவையான அம்சங்கள் எழுத்துலகிலிருந்து வழக்கொழிந்து வருகின்றன. அத்துடன் நவீன ஆங்கிலப் மொழித் தொடர்புகள் குறுகிய சொற்பதங்களுடன் இருப்பதால் சிறந்த இலக்கியப் பதங்களும் அருகிவருகின்றன என்றார். (கி)

### சோலைபுரத்தில் சனசமூகநிலையம்

[யாழ்ப்பாணம்]

யாழ் வில்லூன்றி சோலைபுரத்தில் புதிதாக ஒரு சனசமூக நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இச் சனசமூக நிலையம் இம்மாதம் 21-ம் திகதி திறந்துவைக்கப்பட்டது இதன் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: பொன். பழனிச்சாமி [இராசா], செயலர்: மு. இரத்தினலிங்கம், பொருளாளர்: க. பாலசுப்பிரமணியம், உறுப்பினர்கள்: இ. கமலதாஸ் எம். தம்பிரத்தினம், எஸ். ஜெகநாதன், எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, என். சிவா, பி. செல்வம், எஸ். நாகராஜா, வி. கணேஷ்.

# வருடம் பூராவும் பயன்தரும் ஒப்பிலா விருட்சம் பனை

உலகத்தில் உள்ள மரங்களில் உண்ண உணவு, இருக்க வீடு, உறங்கப்பாய், உழைத்துச் சாப்பிட மூலப் பொருட்கள், உண்பொருள், உண்ணுப் பொருள் ஆகியவற்றை வருடம் முழுவதும் மக்களுக்குத் தரக்கூடிய மரம் பூமியில் பனையன்றி வேறில்லை.

பொதுநல நாடுகளின் பனைவள நிபுணர்
கே. சம்பந்தம்

சொல்லத் தொகுத்து எழுதியவர்:
எஸ். ஜே. ஜெயக்குமார்

## கற்பக தரு

மனிதன் கேட்டதையெல்லாம் தருவதால் 'கற்பகதரு' என்றும், அமிர்தமாகிய பதநீரைச் சுரப்பதால் ''அமிர்த சுரபி' என்றும், அமர புராணம் கூறுகிறது. நூறு ஆண்டுகளுக்கு மேல் வளர்ந்து பயன் தரக்கூடிய பனைமரம், கீழ்க் கண்டவாறு மனிதனுக்கு வருடம் முழுவதும் உண்பொருளைத் தருகிறது.

ஜனவரி-யூன்-பதநீர்
யூலை - ஆகஸ்ட்-நுங்கு
செப்டம்பர்-அக்டோபர்-பழம்
நவம்பர்-டிசம்பர்-கிழங்கு

மறுபடியும் ஜனவரி மாதத்தில் பதநீரைக் கொடுக்கத் தொடங்குகிறது'

## பனை வளர்ப்பின் அவசியம்

தமிழகத்தை ஆண்ட மன்னர்களோ, இலங்கையை ஆண்ட அரசர்களோ பனை வளர்ப்பதில் அக்கறை செலுத்தியிரா விட்டால், அழிந்து போனவை, பட்டுப்போனவை, வைரமுற்றியவை போகத் தற்சமயம் இந்தியாவில் 5 கோடி பனைமரமும், இலங்கையில் ஒரு கோடிக்கு மேலும் பனைமரங்கள் இருந்திருக்க மாட்டாது.

மகாத்மா காந்தியடிகள் பனைவளர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வார்தாவில் தனது ஆச்சிரமத்தில் பனைநடு விழாவைத் தொடக்கி வைத்தார். இன்று பனை வளரும் நாடுகளைவிட உற்பத்தியில் சிறந்து விளங்குவது இந்தியா என்பதை நாம் அறிவோம். அதேபோல இலங்கையில் ஒருகோடி பனை மரங்கள் நல்ல தரமுடையதாகவும், பலன் தரக்கூடியதாகவும், சீனிச்சத்து அதிகமுள்ள அதிகளவு பதநீர் தரக்கூடிய மரங்களாகவும் வளர்கின்றன. நாமும் புதிதாகப் பனை நடுவதில் அக்கறை செலுத்த வேண்டும். பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பொருட்களைத் தமிழ்நாடு ஆண்டொன்றிற்கு மூன்று கோடி ரூபா மதிப்புள்ள பொருட்களைவிற்று அயல்நாட்டுச் செலாவணியை ஈட்டுகிறது. இலங்கையில் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் சிறிய அளவில் பனை மரங்கள்பயன்பட்டாலும் அது தேசியச் சொத்தாக விளங்குகின்றது.

பனை விதைகளைச் சேகரித்து நடுவதில் பொதுமக்களுடைய ஆதரவுடன் பல்லாண்டுகளாகச் செயல்ப்பட்டுவரும் மில்க்வைற் ஸ்தாபனத்தார், பனை அபிவிருத்திச் சபையினரும் இப்பொழுது பனை நடுவதில் விஷேச கவனம் செலுத்துகின்றனர்.

## பயிரிடும் நிலம்

விளை நிலங்களோ, விவசாயத்திற்கு வாய்ப்புள்ள நிலங்களோ பனைக்குத் தேவையில்லை. விளை பொருட்களுக்குப் பொருத்தமற்ற கீழ்க்கண்ட நிலங்களைப் பனை நடப் பயன்படுத்தலாம்.

1] கண்மாய் கரை
[2] ரெயில்வே லையனின் இரு பக்கங்கள்
[3] மலை, குன்றுகளின் சாரல்கள்
[4] கிராமங்களை இணைக்கும் சிறிய ரஸ்தாக்களின் ஓரங்கள்
[5] அரசினர் பயன்விடுதிகளைக் சுற்றியுள்ள இடம்
[6] வன இலாகாவைச் சேர்ந்த நிலங்கள்
[7] பெரிய தொழிற்சாலைகள் திட்டங்களில் உள்ள காலியிடம்
[8] காலி நிலங்கள்
[9] நீர்த் தேக்க ஓரங்கள்
[10] ஆற்று ஓரங்கள்
[11] நெடுஞ்சாலை ஓரங்கள்
[12] பொதுக் கட்டடங்களைச் சுற்றிய வெளிகள்
[13] அரசின் புறம் போக்கு நிலம்
[14] கோவில் தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்கள் முதலியன.

பனம்பொருள்களில் பனந்தும்பு, ஓலைப் பொருட்கள், நாரிப் பொருட்கள், பனந்தும்பினுல் செய்யப்பட்ட பிறஷ் வகைகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து டொலர் சம்பாதிப்பதில் இலங்கை அரசு அதிக சிரத்தை காட்டுகிறது.

தும்பை மூலப்பொருளாக ஏற்றுமதி செய்து அயல்நாட்டுச் செலாவணியை ஈட்டிருவதில் இலங்கைஅரசு, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளுக்குப் பனந்தும்பை ஏற்றுமதி செய்ய முதன் முதலாக 24-09-84 ம் திகதி எடுத்த முயற்சியை நாம் அறிவோம்.

காந்தியினுடைய ஆச்சிரமத்தில் வாழ்ந்த குடிசைத் தொழில் நிபுணர், டாக்டர் ஜெ. சி. குமரப்பா அவர்கள் பனந்தும்பு டொலர் சம்பாதிக்கிறது என்பதை இன்னும் மக்கள் அறியவில்லை என்று கவலைப்பட்டார். பனையில் இருந்து கிடைக்கும் தும்பை உலகில் உள்ள 34 நாடுகள் விரும்பி வாங்குகின்றன. தமிழ்நாட்டில் இருந்து மட்டும் ஆண்டிற்கு 2 கோடி ரூபா மதிப்புள்ள பனந்தும்பு ஏற்றுமதியாவதால் தமிழ்நாடு பனை நடும் திட்டத்தைதக் கடந்த ஆறு ஆண்டுகளாக ஆண்டொன்றுக்கு ஒரு கோடி பனைமரமாவது நட முயற்சி எடுத்தவருகிறது. தொடர்ச்சியாக நாம் இலங்கையில் இருந்து பனந்தும்பையும், இதரப் பொருட்களையும் ஏற்றுமதிசெய்ய வேண்டுமாயின் தொடர்ந்து பனை நடுதலை நாம் கட்டாயம் கையாளவேண்டும்.

பனைமரத்தில் சுமார் 15 அடி உயரமுள்ள மரத்திலிருந்து மட்டும் உயர்ந்த ரகத் தும்பு கிடைக்கிறது. ஏற்றுமதி பெருகப்பெருக நல்ல தும்பைத் தரும் இளம் வடலிகள் நமக்குத் தேவை ஆகவே ஆண்டுதோறும் பனைநடும் விழாவை பொதுமக்கள் சிறப்பாக நடத்த வேண்டும். காற்று, மழை, புயலினுல் பனைமரங்கள் எவ்வாறு சேதப்படாதோ அவ்வாறு அதில் இருந்து கிடைக்கும் தும்பும், ஈரம், கறையான் போன்றவற்றுல் கெட்டுப்போகாது. ஆகையால் பனைவளத்தைப் பெருக்கி, ஏற்றுமதியை அதிகரித்து, ஏழைக்கிராமவாசிக்குத் தொழில் கொடுத்து. வீணுகிப்போய்க் கொண்டிருக்கும் மட்டைகளைப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் நம்மை நோக்கிக்கொண்டிருக்கும் வேலையில்லாத்திண்டாட்டத்தைச் சமாளிக்கவும், நாம் முயற்சிசெய்ய பனை நடவேண்டும்.

''பனைக்குப் பத்தடி'' என்ற தமிழ்மொழிக்கிணங்க பனம் விதைகளைப் பத்தடிக்கு ஒரு விதை என்றவகையில் குறையாதளவில் விதையை நடுங்கள் பனை அபிவிருத்திச்சபை மில்க்வைற் ஸ்தாபனத்தார், மற்றும் பெரியோர்கள் சேகரித்துத்தரும் விதைகளைப் பொதுமக்கள் வாங்கித் தங்கள் நிலங்களில் நடலாம். கூடியமட்டிலும், 6-வது ஆண்டில் இருந்து தும்பைத் தரவும், 14 வது வயதில் இருந்து பதநீரைத்தரவும் பனை ஆரம்பிக்கிறது.

இவ ஸ்தாபனங்கள் கிராமோதைய சபைகள், தேவஸ்தானங்கள், பொதுஸ்தாபனங்கள் திட்டமிட்டபடி விதைகளை நாட்டிப் பயன் பெறலாம்.

(5-ம் பக்கம் பார்க்க)

★ இன்று நினைவுதினம்

# கலாபரமேஸ்வரனும் தமிழியற் சிந்தனைகளும்

கலாநிதி சி. மௌனகுரு
விரிவுரையாளர், நுண்கலைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

கலாபரமேஸ்வரன் நம்மை விட்டுப்பிரிந்து இரண்டுஆண்டுகள் சென்றுவிட்டன. காலம் பிரிவின் துயரை ஆற்றும் அருமருந்து எனினும் ஆற்றலும், மனிதாபிமானமும், பன்முக ஆளுமையும்கொண்ட ஓர் இளைஞரின் அகால மரணத்தின் துயரைக் காலம்கூட ஆற்றி விடாது கலா பரமேஸ்வரன் அதற்கொருசான்று 1944 ஆம் ஆண்டு பிறந்து தனது 39 வது வயதில் 1983இல் அகாலமரணமடைந்த'கலா'வாழ்ந்தகாலம் சிறிதேயாயினும் சராசரி யாழ்ப்பாணத்துத் தமிழ் மனிதனைவிட வித்தியாசமான வாழ்வை — அர்த்தமுள்ள ஒரு வாழ்வை வாழ்ந்தவர். தன் குடும்பம் தன் சுற்றம் என்ற குறுகிய வட்டத்துள் தன் முழு வாழ்வையும் சுருக்கிக்கொள்ளாது: தனது இனம், தனது சமூகம், தனது நாடு, தனது உலகம் எனத் தன் சிந்தனைகளைப் பிரித்துக் கொண்டவர்.

இளம் பராயத்திலேயே பொதுநலப் பணிகளை மேற்கொண்டவர். தனது 16-வது வயதிலே இளம் எழுத்தாளர் சங்கத்தின் ஸ்தாபகராக அமைந்த இவர், 39-வது வயதிலே இறக்கும்போது, மக்கள் நலன் கருதும் குடும்பத் திட்டப் பிரிவின் செயலாற்று முகாமையாளராய் இருந்தார். இடைப்பட்ட காலத்தில் கலையற்ற பட்டதாரிகள் சங்கம், திருகோணமலை கலை இலக்கிய வட்டம் ஆகியவற்றின் செயலாளராயும், யாழ்ப்பாணம் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பொருளாளராயும் இருந்து பொதுப் பணியாற்றினுர். உயர் அதிகாரியாயினும் தமிழியல் ஆய்வு அவரின் பிரதான பணியாயிற்று. இத்துறைக்கு அவரது பங்களிப்பு கணிசமானது. பல்கலைக்கழகங்களின் தமிழத்துறைக்கு வெளியேயும் காத்திரமான தமிழ் அறிஞர்கள் தமிழை ஆய்வு செய்கின்றனர் என்பதற்கு 'கலா'வும் ஓர் உதாரணர்.

பல்கலைக்கழக மாணவனாக இருந்தகாலம் தொடக்கம் எழுதிய கட்டுரைகள் அவரது ஆய்வின் நோக்கையும், போக்கையும், அறிவின் ஆழத்தையும் காட்டுவனவாயுள்ளன. ஏன் இந்த மாற்றம் புலவர் துதியும் புரலவர் துதியும், காதற்கோலம், புதிய ஈழத்துத் தமிழ்க் கவிதை, தமிழரின் இலக்கியத் திறனுய்வுமுறை, முப்பதுகளிற் சிறந்த நாவலாசிரியர் என்பன விதந்தோதற்குரிய அவரது கட்டுரைகளாம். தனது ஆய்வின் தமிழரின் இலக்கியத் திறனுய்வினை ஆய்வுப் பொருளாக எடுத்து முதுமாணிப் பட்டம் பெற்றவர் கலா.

தமது ஆய்வுகளிலே சமூக நன்மைகளுக்கும், சமூக நலன்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தவர் 'கலா'. ஆய்வு என்பது வெறுமனே கெட்டித்தனம் காட்டும் வித்துவத்தன்மை கொண்டதாக அமையாது- சமூகத்திற்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கம்கொண்டவர் கலா. சோழர் காலத்திலே வாழ்ந்த புலவர்களைப் பற்றி தனது கட்டுரை ஒன்றிலே ஆராய்ந்த கலா அவர்களைப் பற்றிய தனது விமர்சனத்தைப் பின்வருமாறு கூறுகிறுர்

''சமுதாயத்தின் மனச்சாட்சியாக இருக்கவேண்டிய புலவர்கள் ஆடம்பர நிலைக்கூடாக அமைதியிழந்து தவிக்கும் தம்மைச்சூழவுள்ள மக்களை மறந்து, மனித உணர்வுகளின் எல்லை கடந்து, ஆளும்வர்க்கத்திற்குத் துதிபாடி இரத்த வெறிபிடித்த பேரரசரின் ஆதிபத்திய ஆசைக்குத் தூபமிடும் வகையில் இலக்கியபடைத்தனர் ''

இங்கு மக்கள் நலன் மறந்த நமது 'பெரும்' புலவாகள் 'கலா'வினுற் கண்டிக்கப்படுவதைக் காணலாம்.

தமிழரின் திறனுய்வுமுறைகள் பற்றிய நமது சிறப்பாய்வைமேற்கொண்ட 'கலா' தமிழருக்குரிய ஒரு பாரம்பரியததிறனுய்வுமுறை உண்டென்பதை பண்டைய உரையாசிரியர்களின் உரைகளைக் கொண்டு நிறுவினுர். எனினும் திறனுய்வு என்பது அவ்வக்காலத்தின் போக்கிற்கு அமைய இயைவது என்பது அவர் கருத்து தனது 39 வயதுக்குள் இவர் தமிழியல்

(6-ம் பக்கம் பார்க்க)

அடியார் துயர்தீர்க்கும் தாய்!

பத்தினித் தெய்வம் நீயே பரவினேர்க்கருளை ஊட்டி
புத்தியோடுற்ற கல்வி விளங்கவே செல்வம் நல்கி
உத்தமராக்கி மேலும் உறதுணை ஆகிநிற்பாய்
சித்திசேர் கன்னுதிட்டி இலங்கிடும் காளித்தாயே!

வந்தனை அடியர்தம்மை வருத்திய துயரமெல்லாம்
அந்தரத் தொடுங்க வோட்டி ஆனந்தம் நல்கும்தாயே
சுந்தரி சுகந்திநீலி தூமணிப்பட்டினுளே
செந்திருக் கன்னுதிட்டி இலங்கிடும் காளித்தாயே!

சோதி ஹாட்வெயர்ஸ்,
(சகலவிதமான கட்டிடப் பொருட்கள் விற்பனையாளர்)
272 (190), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

★ கன்னுதிட்டி அருள்மிகு காளிஅம்பாள் இன்று 3-ம் திருவிழா.

தாய்மையின் சீலம் கண்டேன்

தாயேயுன் கோலங் கண்டேன்
தாய்மையின் சீலம் கண்டேன்
வாய்மையே முதலீ டாக
வாழ்வினை அமைத்துக் கொண்ட
தூய்மையின் விளைவு என்னைத்
துயரத்தில் நீந்த வைக்கும்
நோயினைத் தொடரா வண்ணம்
நோற்பதுன் இதயம் அன்றோ!

சகலவிதமான நோய்களுக்கும் சிறந்தமுறையில் சிகிச்சையளிக்கப்படும்.

கிருஷ்ணு கிளினிக் கிளை:
ஆசாத் வீதி, யாழ்ப்பாணம். கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

★ கன்னுதிட்டி அருள்மிகு காளிஅம்பாள் இன்று 2-ம் திருவிழா.

## 'கலா' ...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆய்வுக்குச் செலுத்திய பங்களிப்புகள் ஆய்வாளரால் கௌரவிக்கப்பட வேண்டியவை.

தமிழாய்வில் மட்டுமன்றி ஆக்க இலக்கியத்துறையிலும் தன் பங்கைச்செலுத்தியவர் 'கலா' சிறுகதை எழுத்தாளரான 'கலா' பல்கலைக்கழகத்திற் படித்த காலத்தில் தொகுத்து வெளியிட்ட சிறுகதைத் தொகுதியே ''காலத்தின் குரல்கள்.'' இதைவிட நாடக ஆசிரியர், நாடக நடிகர், மேடைப்பேச்சாளன் என்று பன்முக ஆற்றல் கொண்டவர் அவர்.

இவையெல்லாவற்றையும் விட 'கலா' ஒரு பெரும் மனிதாபிமானி. மனித உயிர்கள் மீது மிகவும் அன்புகொண்டவர். மக்களுக்காகச் சேவை செய்தல் என்பது 'கலா'வின் இயல்பு. இவ்வடிப்படை இயல்பே அவரின் செயல்கள் யாவற்றிலும் பிரதிபலித்தது. ஆராய்ச்சியாயினும். ஆக்க இலக்கியமாயினும் மேடைப் பேச்சாயினும், நாடகமாயினும், குடும்பத் திட்டப் பிரச்சாரமாயினும் அனைத்திலும் அவரின் இவ்ஆளுமைதான் பிரதிபலித்தது. இத்தகையோர் நம்மத்தியில் வெகு குறைவு. இத்தகைய குணமுடையோர் வெகு இளம் வயதிலேயே சென்றுவிடுகிறார்களே என்பதை நினைக்க மனம் வேதனையடைகின்றது

## வருடம் பூராவும்..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 1000 பனைகள் வளர்க்க பொதுஸ்தாபனங்கள் கீழ்க்கண்டவாறு செலவு செய்து பனை நடலாம்.

### 1000 பனை மரங்கள் பயிரிட ஐந்து ஆண்டுச் செலவு

1000 விதைகளின் கிரயம் 10 சதவீதம் ரூபா 110-00.

குழி தோண்டுதல் ஒரு குழிக்கு 12 சதவீதம் ரூபா 132-00

விதை விதைப்பு - 3 நபர் கூலி ரூபா 45-00.

பாதுகாப்புச்செலவு 1 மரத்துக்கு 8 சதவீதம் 5 ஆண்டுகளுக்கு ரூபா 4800-00.

ஆக மொத்தச் செலவு ரூபா 5087-00

குறைந்தது 1000 மரங்கள் முளைத்துப் பயன்தர சராசரி ரூபா 5/- செலவாகிறது.

6-வது வருஷத்திலிருந்து 14-வது வருஷம் வரை 1000 மரங்களிலிருந்து வரும் வருமானம் பத்தல் ஓலை மூலம் ரூபா 9,120-00.

15வது வருஷத்திலிருந்து சுமார் 60 வருஷம் வரை சராசரி 5 ரூபா வீதம் குத்தகைக்கு விடும்போது வருமானம் (46 வருஷம் X ரூபா 5000) — ரூபா 2,30,000.

### 1000 மரத்தின் உற்பத்திச் செலவும் வளர்ப்புச் செலவும் வருமானமும்

பயிரிட்டுப் பாதுகாக்கும் செலவு 5 ஆண்டுகளுக்கு ரூபா 5,087-00.

5-வது ஆண்டில் இருந்து 14வது ஆண்டு வரை வருமானம் ரூபா 9,120.

15-வது வருஷத்தில் இருந்து 60வது வருஷம் வரை வருமானம் ரூபா 2,30,000.

மொத்தச் செலவு ரூ.5,087. மொத்த வருமானம் ரூபா 2,39 120-00.

குறிப்பு:- மரத்திற்கு வேலி கட்டி உரமிட்டுப் பாதுகாக்கும்பட்சத்தில் செலவு கூடினாலும், அதற்கேற்றபடி 15—60 சதமானம் வருமானம் அதிகரிக்கும்.

ஒரு கிராமோதய சபை 1000 மரங்களை ஒவ்வொரு ஆண்டும் நட்டுப் பாதுகாத்துவருமாயின் முதல் 5 வருஷத்தில் வருமானம் இருக்காது. 6வது வருஷத்திலிருந்து 14வது வருஷம் வரை பத்தல். ஓலை, மட்டை மூலம்ரூபா9 120-00வருமானம் ஈட்டும். 15வது வருஷத்தில் இருந்து 60வது வருஷம் வரை ஆண்டுக்கு ரூபா 5000 வீதம் கிடைக்கும், ஒரு கிராமோதய சபையும் குறைந்தது 10,000 மரங்களை வளர்த்தால் ஆண்டிற்கு கிராமோதய சபையின் அபிவிருத்திப் பணிக்கு ரூபா 50,000 எவ்வித சிரமுமின்றி தேசிய வருமானமாகப் பெறலாம் என்பதை அறியலாம். எனவே கிராமோதயசபைகள் இவ்வாண்டே பனைநடும் திட்டங்களை மேற்கொள்ளலாம்.

# என்னைக் கவர்ந்த கலைஞர் பேச்சில் சுவைத்த வரிகள்



முத்தமிழ் வளர்த்த மூவேந்தர் வாழ்ந்த தீந்தமிழ் நாட்டில் தமிழுக்குப் போராடிய நக்கீரன் வாழ்ந்த மாமதுரை நகரிலே மகாநாடு ஒன்று நடைபெறப் போவதாக அறிந்து தமிழகத்திற்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட நான் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து கொண்டேன்.

மகாநாட்டு மேடையில் வீற்றிருந்தோரையும் மகாநாட்டைத் தரிசிக்க வந்திருந்த ஜன சமுத்திரத்தையும் கண்டு வியப்படைந்தேன். திராவிடர் நலனுக்காகத் தன்னையே தியாகம் செய்து, தனது தலையும் தாடியும் நரைக்கும்வரை ''தமிழுக்காகவே வாழ்வேன். தமிழுக்காகவே சாவேன்'' என்று இறுதிவரை போராடி, அமரத்துவம் அடைந்த ஈ. வெ. ரா. பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்ட திராவிடர் கழகம், இம்மகாநாட்டை நடத்த முன்வந்தது தமிழினத்தின் மாபெரும் பாக்கியமாகும். இவ்வுணர்ச்சிக் கொந்தளிப்புடன் அரங்கத்தை நோட்டம்விட்டேன்.

திராவிடர் கழகத்தின் செயலரும், பெரியாரின் பிரதம சீடருமாகிய திரு. வீரமணி அவர்கள் இம்மகாநாட்டுக்குத் தலைமை தாங்கியது, பெரியாரையே எம்முன்னால் கொண்டு வந்து நிறுத்தியதுபோல் இருந்தது. அவரைச்சுற்றி தி.மு.க. தலைவர் மு கருணாநிதி, த.வி. கூ. செயலாளர் அ. அமிர்தலிங்கம், காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் குமரிஅனந்தன், மதுரைஆதீனம், பிதா யோசப் பிள்ளை, ஈழவேந்தன், காசி ஆனந்தன், திருமதி மங்கையர்க்கரசி ஆகியோருடன் வேறு பல பிரமுகர்களும் காணப்பட்டனர்.

தலைவரின் ஆரம்ப உரையைத் தொடர்ந்து உரையாற்றிய பல பேச்சுவல்லுனர்களின் வரிசையில் சிலருடைய பேச்சு என் உள்ளத்தைவிட்டு இன்றும் நீங்காமல் இருக்கிறது. உதாரணமாக, பிதா யோசப்பிள்ளை அவர்கள் பேசுகையில், உலகத்தில் 'பலோ' என்ற நாட்டில் 14,000 மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு தனி நாடு உண்டு அதைப்போல 6000 சனத்தொகையைக் கொண்ட ''நெரு'' என்ற நாடும் ஒரு தனிநாடாக விளங்குகிறது ஐக்கியநாடுகள்சபையிலும் இந்நாடு அங்கத்துவம் பெறுகிறது. எம்தமிழ் மாநிலத்தில் கூட நாற்பத்துநான்கு கட்சிகள் இருக்கின்றன. இவ்வளவு கட்சியும் ஒரு மாநிலதிற்கு தேவையா? இவை தனித்தனியாக குரல் கொடுக்காமல், அனைத்தும் ஒன்று சேர்ந்து இலங்கைத்தமிழர் பிரச்னைக்காக ஒரே குரலில் பாடுபட்டால் என்ன?

தொடர்ந்து த. வி. கூ. செயலதிபர் அ. அமிர்தலிங்கம் பேசியபொழுது ''இலங்கை இனப்பிரச்சினை காரணமாகப் பல தமிழ்மக்கள் அகதிகளாக இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். நானும் ஒரு அகதியாகவே இங்கு வந்திருக்கிறேன். அண்மையில் இலங்கையில் நடந்த இனப்பிரச்னையை ஓரளவுக்கு அமைதிக்குக் கொண்டு வந்தவர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியே. நாங்கள் எவ்வளவுதான் கூக்குரல் இட்டபோதும் பிரச்னையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் இருந்தது இந்திராகாந்தியின் தலையீட்டினாலேதான் சிறிதளவாவது இலங்கை அரசாங்கம் சிந்தித்தது. எனவே திருமதி இந்திராகாந்திக்கு எமது நன்றியை இச்சந்தர்ப்பத்தில் கூறாமல் இருக்க முடியாது.''

பலமணி நேரங்களாக ஆவலோடு எதிர்பார்த்திருந்த சொல்வல்லுனரான கலைஞர் கருணாநிதி ஒலிபெருக்கிக்கு முன்வந்ததும் மக்களின் கை தட்டலும் கோஷமும் வானைப் பிளந்தது. சிறிதுநேர அமைதிக்குப்பின் பேசத் தொடங்கினார் கலைஞர்.

### மணிகளுள் வீரமணி

தலைவர் வீரமணியைப்பற்றிக் குறிப்பிட்ட அவரது மணியான பேச்சை என்னால் விபரிக்காமல் இருக்க முடியவில்லை. ''அவர் ஒரு மணி என்றால் எப்படியான மணி என்று யோசிக்கிறீர்களா? அவர் மதுரைமணி. இன்று திராவிடக்கழகமணி. இப்பொழுது இம்மகாநாட்டுக்கு தலைவர் மணி, எங்கள் எல்லோர்க்கும் அன்புமணி, பெரியாரின் அன்றைய கொள்கைகளை இன்றும் நிலைநாட்டுவதில் ஒப்பிலா மணி-தனித்துவமணி, உங்களின் கண்மணி, என் இதய மணி அவர்தான் இந்த வீரமணி'' என்றார் கலைஞர்.

தொடர்ந்து பிதா யோசப் பிள்ளையின் பேச்சுக்குப் பதில் அளிக்கையில் ''ஒரு மாநிலத்தில் ஒரே இனத்தை வழிநடத்துவதற்கு 44 அரசியல்கட்சிகள் தேவைதானா? என்று கேட்டார். கலைஞர் தேவைதான் என்றார். பிதாவைப் பார்த்து தங்களுக்குப் பிரார்த்தனை செய்வதற்கென்று ஒருநேரம், பாவமன்னிப்புக்கென்று ஒரு நேரம், உணவருந்துவதற்கென்று ஒருநேரம், உலாப் போவதற்கென்று ஒரு நேரம், சேவை செய்வதற்கென்று ஒரு நேரம். உறங்குவதற்கென்று ஒரு நேரம் என்று கணித்துள்ளீர்கள். இவ்வளவு கடமைகளையும் ஒரே நேரத்தில் செய்ய முடியுமா? முடியாது. அதே போலத்தான் தமிழ்நாட்டில் உள்ள 44 கட்சிகளும் ஒன்று சேர முடியாது. ஒரே நேரத்தில் கூக்குரலிடவும் முடியாது.

கலைஞர் கருணாநிதி தொடர்ந்து பேசுகையில், ''இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வருகிறார்கள். தானுமே ஒரு அகதிதான் என்று கூறினார் திரு அமிர்தலிங்கம். நான் கூறுகிறேன் தமிழன் இன்னொரு தமிழன் வாழும் இடத்திற்குப்போய் நான் ஒரு அகதி அகதி என்று கூறத்தேவையேயில்லை. உலகம் முழுவதிலும் தமிழன் வாழாத நாடே இல்லை.

''பிள்ளை ஒன்று அழுகிறது. அதன் முன்னால் ஒரு பம்பரத்தைச் சுழற்றிவிட்டால் அப்பிள்ளை அழுகையை நிறுத்தி விடும். அதேபோலத்தான் அழுதபிள்ளை ஆகிய இலங்கை அரசாங்கத்திற்கு முன்னால் திருமதி இந்திரா அம்மையாராகிய பம்பரத்தை மட்டும் வைத்தால் போதுமா? அதைச் சுழற்றிவிட வேண்டுமே. அதைச் சுழற்றியவன் நான். எனது மக்கள், தமிழ்நாட்டு மக்கள்'' என்றார் கலைஞர். ஆகவே எனது கூக்குரலால் மட்டுமே பம்மரம் சுழன்றதே தவிர பம்பரம் தானே சுழன்றதல்ல. இதைத் திருவாளர் அமிர்தலிங்கம் உணர வேண்டும் என்றார். இக்கட்டத்தில் மக்களின் கரகோஷம் இடியோசைபோல் அதிர்ந்தது.

**இலங்கைவேந்தன்**

# கனவே! இது நனவோ!

கனவுக்கு உண்மையில் ஏதாவது கருத்து இருக்குமென்று பெரும்பாலான மக்கள் இப்போது உறுதியாக நம்பிவருகின்றனர். கெட்ட கனவொன்றைக் கண்டவர் காலையில் எழுந்ததும் இடி விழுந்ததுபோலக் கையை வைத்துக்கொண்டு வருந்துவதும், மகிழ்ச்சியான கனவொன்றைக் கண்டவர் மற்றவரிடம் அதுபற்றிப் பிரலாபிப்பதும் வழக்கமாக நாம் காண்பனவாகும். உண்மையில் கனவு என்றால் என்ன? அது எப்படி உண்டாகின்றது?

'தொம்சன்' என்பவரது கருத்துப்படி ''துயில்கின்ற நேரத்தில் இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு கனவு வீதம் ஒவ்வொருவரும் கனவுகாண்கின்றனர். தாம் கனவே காண்பதில்லை என்பவர்கள் தமது கனவுகளை நினைவுபடுத்த முடியாதவர்களேயாவர்.''

கனவுகள் தோன்றுவதற்குப் பேய்பிசாசுகள் காரணமென்று பாபிலோனியர் நம்பினர். கடவுளும், கடவுட் தன்மை நிறைந்தவர்களுமே கனவுகட்குக் காரணமென்று எகிப்தியர் எண்ணினர்.

### ஆய்வாளர் நோக்கு

மனத்தில் தோன்றும் ஆசைகளே கனவுகட்குக் காரணம் என்று 'பிளேட்டோ' கருதினார். உடலைச் சார்ந்து எழும் எண்ணங்களே கனவின் அத்திவாரம் என்று 'அரிஸ்டோட்டில்' எண்ணினார்: கனவும், நனவும் ஒன்றேஎன்று 'டெஸ்கிரேட்ஸ்' கருதினார். 'ஹொப்ஸ்' என்பவரோ ''கனவும் நனவும் சம்பந்தமேயற்ற இரண்டு வெவ்வேறுவிடயங்கள்'' என்று கருதினார். 'லீபின்ற்ஸ்' என்பவர் ''நடந்து முடிந்த சம்பவங்கள் உடலையும் உள்ளத்தையும் நினைவுபடுத்தி வெளிப்படலே கனவு'' என்றார். 'ஹார்ட்மன்' என்பவரோ 'மனிதனில் உள்ள நனவிலி மனத்தில் இருந்து தான் கனவுகள் வெளிப்படுகின்றன' என்று கருதினார். இப்படியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரை கனவு பற்றிப் பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

**கனகசபாபதி நாகேஸ்வரன்**

### கனவும் காட்சியும்

கனவைப் பற்றிய 'சிக்மன்ட் பிராய்ட்டின்' கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். 'கனவுகள் உள்ளத்தில் அடைந்து கிடக்கும் ஆசைகளையும், பாலியல் உணர்வுகளையும் குறிக்கின்றன' என்றார். நனவிலி உள்ளத்தில் அமிழ்ந்துள்ள உணர்வுகளின் விம்பமே கனவு என்று அவர் விளக்கினார். இதிலிருந்து கனவென்பது மனித உள்ளுணர்வுகளின் வெளிப்பாடேயன்றி வேறல்ல என்று தெளிவானது. கனவென்பது காட்சிகளின் பின் தொடரலாகும்

கல்கின்ஸ்' என்பவரின் பரிசோதனையின்படி 397 கனவுகளில் 240 கனவுகள் பின் தொடரலாகும். ஏனையவை ஏனைய புலன்களால் உணரப்பட்ட சம்பவங்களை பின்னணியாகக் கொண்டிருக்கின்றன.

சம்பந்தமில்லாத சம்பவங்கள் கனவாகுவதே இல்லை மகிழ்வு மனத்தின் நினைவுத் துண்டுகளே கனவுகளின் வடிவம் என்று 'ஒஸ்வால்ட்' எண்ணுகிறார்.


இன்றைய உளவியலாளரான ஹால் [Hall] கனவைப் பின்வருமாறு விளக்குகின்றார், ''சிந்தனையென்பது கற்பனையின் ஒருமுறையாகும். அதன் விளைவாக எண்ணம் பிறக்கிறது.

விழித்திருந்தாலென்ன துயின்றாலென்ன சிந்தனை முறையும், எண்ணமும் ஒரே முறையானவையே. விழித்திருக்கும்போது ஏற்படும் சிந்தனையை எண்ணம் என்கிறோம். நித்திரையின் ஏற்படும் சிந்தனையைக் கனவு என்கிறோம் ஆகவே கனவு என்பது மனத்தின் சிந்தனையே தவிர தெய்வீகமானதோ, பொருள் காட்டுவதோ, வருங்காலம் உணர்த்துவதோ அல்ல. எண்ணமும் சிந்தனை

(7-ம் பக்கம் பார்க்க)

## முதலாம்வருட நினைவஞ்சலி

### திரு. வ. இராமலிங்கம்



தோற்றம்:
17-03-1926

மறைவு:
03-08-1984

திதி: 24-07-1985

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்துவிட்ட அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை என்றும் விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகன்.
'யமுனா', சுதுமலை மேற்கு, மானிப்பாய். [4631]

## ஈராண்டு நினைவஞ்சலி

### திரு. சின்னையா சிவானந்தன் (ஆனந்தன்)

(முகாமையாளர் ரதி வோச் வேர்க்ஸ், யாழ்ப்பாணம்)

| மலர்வு:- | உதிர்வு:- | திதி:- |
| --- | --- | --- |
| 13-02-1943 | 24-07-1983 | 31-07-1985 |



எதிர்பாராப் படுகொலைக்கு – நீர் பலியாகி ஈராண்டு கழிந்திடினும் - அன்பே நின் நினைவை மறவோம், மறவோம். நீண்ட நெடுந்துயர் எமக்கு, துயில் மறந்து உமை நினைந்து நிதமும் நீர் கொண்ட மேகமாய் கண் கலங்கி தவியாய் தவிக்கிறோம்.

பிரிவால் வாடும்:
தாய், மனைவி,
பிள்ளைகள்:- நிஷாந்தி, பிரசன்னா, சிந்துஜா.

சி. தவநீதராஜன்,
131/1, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (4632)

## இரண்டாவது நினைவஞ்சலி





எஸ். சரவணமுத்து க கலாபரமேஸ்வரன்

| எஸ். சரவணமுத்து | க கலாபரமேஸ்வரன் |
| --- | --- |
| தோற்றம்: 19 - 4 - 1901 | தோற்றம்: 2 - 8 - 1944 |
| மறைவு: 24 - 7 - 1983 | மறைவு: 24 - 7 - 1983 |

திதி: 31 - 7 - 85

நல்லவர்கள் சாவதில்லை. கல்வி மானாக நல்லாசிரியனாக வாழ்ந்து வழிகாட்டிய தெய்வமே உங்களின் புகழ் அழிவற்றது. இலக்கிய எழுத்தாளனாக வாழ்ந்து, நட்பின் இலக்கணமாகத் திகழ்ந்த ''கலா'' நீங்கள் மறையவில்லை. எங்கள் நெஞ்சங்களில் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். — மனைவி, மக்கள், தந்தை, சகோதரர்கள், மைத்துனர், மைத்துனியர்.

இலக்குமி பதி, பலாலி வீதி, திருநெல்வேலி (4620)

## இன்றைய பலன்

மாதம்—ஆடி
திகதி—9 (1985-7-24)
புதன்கிழமை
திதி—ஸப்தமி மூ இ. வரை
நக்ஷத்திரம்—சித்திரை பி. இ வரை

மேடம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத்தரலாம் ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டை விடக்கூடும்.

இடபம்: பிதா வழி பொருள் வரவுக்கு இடம் உண்டு புண்ணியஸ் தலயாத்திரை யொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

மிதுனம்: கடமை புரியும் இடத்தில் சக தொழிலாளர்களுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம். மேலிடத்து கண்டிப்புக்கும் ஆளாக நேரிடும்.

கடகம்: மூத்த சகோதரர் ஒருவரின் உடல் நலம் பாதிக்கப்படும். இன்று அதிக மூதலீடு செய்வதை தவிர்த்து கொள்ளவும்.

சிங்கம்: இன்று ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம வேண்டும். உதவி செய்யப் போய் உபத்திரவப்படுவீர்கள். எவ்விடயத்திலும் நிதானம் நன்று.

கன்னி: உமது விடயங்கள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும். மனதில் அமைதி குன்றும் விடாமுயற்சி நன்று.

துலாம்: நீண்ட நாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திக்க நேரும். எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு. பேச்சில் நிதானம் பெருமைதரும்.

விருச்சிகம்: நீண்ட நாள் கடன் இன்று நிவர்த்தியாகும் முயற்சி பலனளிக்கும் மூத்தவரால் முன்னேற்றம் உண்டு.

(9-ம் பக்கம் பார்க்க)

## கனவோ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஒவ்வொருவருக்கும் தனித்துவமாக இருப்பதுபோலக் கனவும் தனித்துவமாகவே இருக்கின்றது.

### தீர்க்கதரிசினியா?

கதைகள் சில சமயங்களில் சூழலையும். சம்பவங்களையும் பிரதிபலிப்பனவாய் இருக்கின்றன. கதைக்கு வருங்காலம் உணர்த்தும் தன்மை இல்லை அவை உணர்வுகளின் பிம்பங்களே.

''ஒரு கல்லூரி மாணவி தன்னுடைய ஆசிரியை ஒரு வர்தோட்டக்காரனுடன் உலாவுவதை ஒரு நாள் கண்டாள். அந்தக்காட்சி அன்றிரவுத் தூக்கத்தில் அவளுக்குக் கனவாக உருவானபோது தோட்டக்காரனும் ஆசிரியையும் மணம்முடிக்கக் கண்டாள். இதை அவள் தன்னுடைய சகமாணவிகளுக்குக் கூறினாள். அதன்பின் சில நாட்களில் அவ்விருவரும் மணம்முடித்துக் கொண்டனர். இது ஒரு தற்செயற்கனவே. அறிவியல் நோக்கற்றோர் அவளைப்பெரும் தீர்க்கதரிசினி என்றே நினைத்தனர்.

கனவுகள் மன உணர்வுகளையும், சிந்தனைகளையும் பிரதிபலிப்பனவே. கனவுகளால் தூக்கத்தில் பெரும் சத்தம் இடுபவர்களாகவும் தங்களைத் தாங்களே தூக்கத்தில் அடித்துக் காயம் விளைவிப்பவர்களாகவும். அழுவோராகவும் இருக்கின்றனர் இவை மனத்தின் பிரதிபலிப்பேதவிர வேறல்ல. ஆயினும் கனவில் தோறுவனவெல்லாம் மனத்தின் உணர்வுகளை நூற்றுக்கு நூறு பிரதிபலிக்கின்றன என்றுங் கருத முடியாதிருக்கின்றது.

பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் மாணவன் ஒருவன் வினாத்தாளைக் கனவில் காண்பது வெறும் மனத்தின் உணர்வும், எண்ணங்களுமே தவிர வேறொன்றுமில்லை.

## ஆறும் ஆண்டு நினைவஞ்சலி

### மாணிக்கவாசகர் குகலோஜன்



தோற்றம்:
13-1-1951

★

மறைவு:
24-7-1979

அன்புடன் நினைவு கூரும்:
அம்மா, தம்பி, சகோதரிகள்

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை. 4585

## 2-ம் ஆண்டு நிறைவு

ஈழத் தமிழ் மக்களது
போராட்டமானது.
உலகளாவிய ரீதியில்
மனிதன் மனிதனாக வாழ்வதற்கு
நடாத்தும் போராட்டத்தில்
ஓர் அங்கமே!



| மலர்வு: | உதிர்வு: |
| --- | --- |
| 17 | 24 |
| 01 | 07 |
| 1954 | 1983 |

### அந்திரேஸ்பிள்ளை விமலதாசன்


அமரருக்காகவும், தொடர்ந்த வன்செயல்களினால் இறந்தோருக்காகவும், 24-07-85 புதன்கிழமை பி. ப. 5 மணியளவில் புனித பற்றிமா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

4510 பற்றிமா கிரி, பண்டத்தரிப்பு

## 31ம் நாள் நினைவஞ்சலி

### க. செல்லையா

(அதிபர், அ. மி. த. க. பாடசாலை, அளவெட்டி)



அன்னையின் மடியில்:
15-12-1936

ஆண்டவன் அடியில்:
24-06-1985

திதி: 24-07-1985

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் இப்பூவுலகில் வாழ்ந்த காலமெல்லாம் புகழுலகிலே துலங்கி மறைந்தீர் உமது நாமம் என்றும் மறையாது புகழ் பெற்று நிற்கின்றது. எம்முடன் நீர் வாழ்ந்த காலமெல்லாம் சீரும் சிறப்புடன் இருந்து எம்மை மகிழ்வித்தீர். எம்மை வழி நடத்திச் சென்ற குடும்பத் தலைவா! நம் மத்தியில் இருந்து காலன் உங்களைப் பிரித்தாலும் உங்கள் அன்பு நினைவுகள் எம்மைவிட்டுப் பிரியாது. பாசத்தால் எம் இதயத்தில் அகல் விளக்காக மலர்ந்தீர். உங்கள் பிரிவால் துயருறும் எம்மை ஆண்டவன்தான் வழி நடத்திச் செல்லவேண்டும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். —அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றியும் எமது துன்பங்களில் பகிர்ந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, அருமைமக்கள், மருமக்கள், சகோதரிகள், மைத்துனர்.

கே. ஐயாத்துரை,
கலைநகர், அளவெட்டி தெற்கு. (4587)

## ஜெர்மனியில் மரணமான வல்வை இளைஞரின் மரணம் தற்கொலையாம்

### உறவினருக்குத் தகவல்

(வல்வெட்டி)

மேற்கு ஜெர்மனியில் அண்மையில் காலமான வல்வை இளைஞரான வடிவேலு விமலேந்திரனின் (25வயது) மரணம் அங்கு பத்துநாட்களை இடம் பெற்ற மரண விசாரணைகளை யடுத்து தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக உறவினர்களுக்கு அங்கிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஜெர்மனியில் கடந்த 4 வருடங்களுக்கு மேலாக வசித்துள்ள இவர் அங்குள்ள மதகுரு ஒருவருடன் வசித்து வந்ததாகவும் பிரஸ்தாப மதகுரு இவருக்கு அண்மையில் தமது சொத்துக்களில் 3000 டொஸ்மார்க் பெறுமதியை உயில் எழுதியதாகவும் இவரது நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டாம் திகதி தமது நண்பர்களுடன் விருந்தில் ஈடுபட்ட இவர் மறுநாள்காலை அவர்கள் சென்று பார்த்த போது தமது அறையில் சுருக்கிட்ட நிலையில் இறந்துகாணப் பட்டாராம்.

இவரது சகோதரர்கள் இருவரும் மேற்கு ஜெர்மனியில் இருக்கின்றனர். இவரதுதகனக் கிரியைகள் நடைபெற்று அஸ்தியை இங்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இவரதுமரணம் இவரின் சகோதரர்களுக்கும் உறவினர்களுக்கும் சந்தேகமாகவே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய நிருவாகிகள்

(யாழ்ப்பாணம்)

செட்டிகுறிச்சி பாவனையாளர் பாதுகாப்புச் சங்க புனரமைப்புக் கூட்டம் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் மனையில் நடைபெற்றது.

உதவி ஆணையாளர் திரு. த. மார்ண்டு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் புதிய நிருவாகிகள் தெரிவும் இடம் பெற்றது விபரம் வருமாறு: தலைவர் ஆர். செல்வராசா, உபதலைவர்: க. ஜெகராசா, செயலாளர்: க புஷ்பராசா, உபசெயலாளர்: க. ரதிதேவி. பொருளாளர்: மு. செல்வநாயகம், நிருவாகசபை உறுப்பினர்களாக நான்கு பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ஐயாத்துரை நலலையா, தனது 42வருட அரசாங்க சேவையில் இருந்து நேற்று தொடக்கம் ஓய்வு பெறுகிறார். இவர் கொழும்பில் 25 வருடமும், யாழ்ப்பாணத்தில் 4 வருடமும், மட்டக்களப்பில் 5வருடமும், பரந்தனில் 8வருடமும் பல திணைக்களங்களில் பிரதம கணக்கு லிகிதராகக் கடமையாற்றியிருக்கிறார். இவருக்கு பரந்தன் கூட்டுறவு இலாகா நலன்புரிச் சங்கம் பிரியாவிடைவைத்து இன்று கௌரவிக்க விருக்கிறது.




லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3 30, 6-45
ஆனந்பாபு—ஸ்ரீவிதா
பாடும் வானம்பாடி

மேயர் மினி
(கன்னாதிட்டி)
10-30 2 30, 6-30
எம் ஜி ஆர் —லதா
நேற்று இன்று நாளை

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30
4-30 p m
A BRIDGE TOO FAR
விறுவிறுப்பூட்டும் காட்சிகள் நிறைந்த படம்

கஜேன்
மினி சினிமா
(சத்திரம் சந்தி அருகாமை)
10-30, 12-30, 2-30,
4-30, 6-30
5 OFFENS
WAR FILM
நாட்டின் விடுதலைக்காகப் போராடும் விடுதலை வீரர்களின் உணர்ச்சிக் காவியம்

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி
அருகாமை
தினசரி 10-30,12-30,2-30,
4-45, 7-00
I spit on your Grave
(நீ பிணமானாலும் நான் வந்து பழிவாங்குவேன்)
4 கயவர்களால் ஓர் இளம் பெண் கொடூரமான முறையில் ஒருவர் பின் ஒருவராக கற்பழித்து சித்திரவதை செய்கிறார்கள். அப்பெண் தன்னை கற்பழித்த அந்த நால்வரையும் பழிவாங்கும் திரைச்சித்திரம். காணத் தவறாதீர்கள். சந்தர்ப்பம் மீண்டும் கிடையாது.
(இது கண்டிப்பாக வயது வந்தவர்கள் மட்டும்)

வெலிங்டன்
10-30, 2-15, 4-30,
6-45, 9-00
Five Times All China
Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
Shaolin Temple
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ கராட்டி வீரசாகசங்கள் நிறைந்த சீன வீரர்களின் திகிலூட்டும்சம்பவங்களை நேரில் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்)
கொழும்பு மாநகரில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய படம்.

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்) பூர்ணிமா, ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

ஸ்ரான்லி மினி
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Escort Girls
வயது வந்தவர்களுக்கு மட்டும்

## ரஜீவ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கின்றார்.

சீக்கியத்தலைவரின் முன் நிபந்தனைகளை ஏற்பது குறித்த விடயத்திலும் அவர்களுக்கான உரிமைகளை வடஇந்திய இந்துக்களின் சம்மதத்துடன் வழங்குவது குறித்தும் சில முக்கிய பிணக்குகளை பிரதமர் ராஜீவ் இச்சந்திப்பின்போது எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (கி)

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30, 6-30,
பிரேம் — அஞ்சலி
குரோதம்
(கலர்)
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
Dragon Lee... John Lie
in
"KILL ALL KILL AGAIN'
— Full of Karatte —

இன்று முதல்
ஹரன் மினி
10-30, 12-30, 2-30,
4-30, 6-30
DIE EROBERER
ஐந்து இளஞ்சிங்கங்களின் பயங்கர கராட்டிச் சண்டைகள் நிறைந்த படம்.

மொடேர்ண்
மினி சினிமா
5 X 5 திரையில்
தினசரி 4 காட்சிகள்
NEW YORK NIGHTS
(வயது வந்தவர்கள் மட்டும்)

உஷா மினி
(கே. கே. எஸ். வீதியில்)
தினசரி 10-30, 2-30
4-30, 6-30
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே. முந்துங்கள், தவறவிடாதீர்கள்.

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவில்/வெலிங்டன் தியேட்டர் சந்திக்குமிடையில்)
10-30, 2-30, 4-30,
7-00 மணி
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

குமரன்
மினி சினிமா
10-30, 12-30, 2-30, 4-30
Charles Bronson
Ten to Midnight
(Adults Only)

## உரும்பராய்ச் சிறுவன் மரணம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபரான காந்தருபனை நீதிமன்றத்தில் உரும்பராய் கிராமசேவையாளர் செல்லத்துரை ஆஜர் செய்தார்.

சந்தேகநபரான காந்தருபன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடவேண்டுமென்றும் அடுத்த தவணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்றும் நீதவான் பணித்தார்.

காந்தருபன் சாட்சியத்தில் கூறியதாவது:-

'இறந்தவரான எனதுதம்பியாரை நான் காசு கேட்பது வழக்கம். சம்பவ தினத்தன்று தம்பியார் தண்ணீர் அள்ளுவதற்கு கிணற்றுக்கு வந்துகொண்டிருந்தபோது காசு தரும்படி கேட்டேன். அவர் என்னை தூஷணமாகப் பேசினார். அவரது தலையில் கையால் அடித்துவிட்டு வேறிடத்துக்கு ஓடி ஒளித்திருந்தேன். கொலை செய்யும்நோக்கமாக அவருக்கு அடிக்கவில்லை'.

கடை உரிமையாளர் துரைச்சாமிப்பிள்ளை ஏகாம்பரம் பிள்ளை சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

''இரு சகோதரர்களும் சம்பளம் எடுத்ததும் பிரச்னைப்படுவதுண்டு கடந்த 14ம் திகதி காந்தருபன் லீவு எடுத்துக்கொண்டு அன்றிரவு 7மணியளவில் மீண்டும் கடையின் பக்கம் வந்திருந்தார். அப்பொழுது தண்ணீர் அள்ளப்போன அவரது தம்பியாரைக் காணாது தேடினோம். கடைக்குப்பின்னால் உள்ள கிணற்றுக்குள் டோர்ச்லைட் எரிந்தபடி கிடந்தது அயலவர் உதவியுடன் கிணற்றுக்குள்ளிருந்த அவரை மீட்டெடுத்த பொழுது அவர் இறந்துவிட்டதை அறிந்தேன். பின்னர் மறைந்திருந்த சகோதரனான காந்தருபனை வேறிடத்தில் இருக்கக் கண்டுபிடித்தோம்''

உரும்பராய் கிராம சேவகர் எஸ் ஜே. செல்லத்துரை என்பவரும் சாட்சியமளித்தார்.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (மா)

## பஸ் பருவகாலச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 6 மாதகாலமாகப் பருவச்சீட்டுக்கான கொடுப்பனவுகள் மணிஓடர், காசோலைகளாகவே பெறப்பட்டுவந்தன. இனிமேல் ரொக்கப் பணம் செலுத்திப் பருவகாலச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களுக்கு பருவகாலச்சீட்டுக்கள் வழங்குவதில் எதுவித மாற்றமுமில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (மா)

## தனிமையிலிருந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது

நேற்றுமுன்தினம் 22-ம் திகதி பகல் 11 மணியளவில் மழை கொட்டிக்கொண்டிருந்தபோது இளைஞர் ஒருவர் அவ்வீட்டுக்கதவைத் தட்டியதைத்தொடர்ந்து, வீட்டுக்காரப்பெண் கதவைத் திறக்கவே அவர் இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி வீட்டைச் சோதனையிடவேண்டும் என்றும், சத்தமிட்டால் துப்பாக்கியால் சுட்டுவிடுவேன் என்றும் எச்சரிக்கை செய்ததாகவும் பின்னர் அப்பெண்ணை வீட்டுக்குள் கொண்டுசென்று திடீரென பெண்ணின் கழுத்திலிருந்த நாலரைப் பவுண் தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (மா)

## இன்றைய பலன்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தனுசு: இல்லத்தில் இனிமை குன்றும். இல்லறத்திலும் சிக்கல் தோன்றும் இனசனக் கொண்டாட்டமும் உண்டு.

மகரம்: குருத்தொழில் புரிவோர் அட்டவதானம் வேண்டும். பிறர் தலையீடு தவிர்க்கப்படல் வேண்டும் கவனம் நன்று.

கும்பம்: சிறு விடயத்திற்கு கூட ஆத்திரப்படுவீர்கள் உள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றும் பொறுமை நன்று.

மீனம்: களஸ்திர சுகத்துடன் கண்ணியம் சேரும் காதலர்களாயின் சிறு சஞ்சலத்திற்கு இடமுண்டு கனகுஷியான தினம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## உப்புவெளி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவதினம் கான்ஸ்டபிள் ராஜபக்ஷகெதர தமது சகாவான இரத்தினம் என்பவரது வீட்டுக்குச் சென்றதாகவும். திருகோணமலை 3ம் கட்டையிலுள்ள அவரது இல்லத்தில் அவருடன் கதைத்துவிட்டு இருவரும்வெளியேவரும்போது 10 பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி இவர்களை நோக்கி சுட்டதாகவும் இதில் ராஜபக்ஷ ஸ்தலத்திலேயே இறந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது

இதன்பின்னர் மேற்படி சடலத்தை எடுப்பதற்காக 14 பேர்கொண்ட பொலிஸ் கோஷ்டி அந்த இடத்திற்குச் சென்றபோது சில இனந்தெரியாதவர்கள் பொலிஸார்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் பொலிஸார் பதில் துப்பாக்கிப்பிரயோகம் செய்து நிலைமையைச் சமாளித்து சடலத்தை எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

## அத்தியாவசிய...

(10-ம்பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. எஸ். சிவமகராசா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

நெருக்கடி மிகுந்த இந்த வேளையில் கூட்டுறவுச் சங்கங்கள் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையை நிறைவேற்ற எத்தனையோ கஷ்டத்தின் மத்தியில் சேவையாற்றி வருகின்றன. கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் உயிரைப்பறிகொடுத்து. உயிரைத்துச்சமென மதித்து சேவையாற்றிவருவதை மறந்துவிடக்கூடாது. இவ்வாறு சேவையாற்றுகின்ற கூட்டுறவு ஊழியர்களுக்கு உரிய சம்பளங்களை கொடுக்க இயலாமல் சில சங்கங்கள் கஷ்டப்படுகின்றன. இதற்குக் காரணம் அவர்களின் நிதி நிலைமையே. அந்நிலையிலும்கூட கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட போதெல்லாம் தங்களின் இயல்புகளுக்கு அதிகமாகப் பொருளாகவும், பணமாகவும் வாரி வழங்கியமையை நாம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது எனவே இவ்வாறன சங்கங்களில் பணம், பொருள் கொள்ளை, வாகனம் கடத்தல் ஆகியன இடம்பெறுவதால் அச்சங்கங்கள் மேலும் பாதிப்படைகின்றன. இது வரை கொள்ளையிடப்பட்ட நிதி, பொருள்களை திருப்பிக் கொடுக்க முடியாவிட்டாலும், கூட்டுறவுச் சங்க வாகனங்களையாவது திருப்பி ஒப்படைக்கச் செய்வதற்கு தமிழ் மக்கள் மதிக்கின்ற இளைஞர் சக்திகள் முன்வரவேண்டும்.

## எம். ஜி. ஆர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் எம். ஜி. ஆருடன் போக்குவரத்து அமைச்சர் திரு. எஸ முத்துச்சாமியும் செல்லவுள்ளார் முதலமைச்சரின் ஜப்பானிய விஜயம் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லையானாலும் திரு. எம். ஜி. ஆர் இந்தப் பயணத்தை தமது மருத்துவப் பரிசோதனைக்குப் பயன்படுத்துவார் என்று நம்பப்படுகின்றது. (அ)

## ஆயுதப்படை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் முயற்சிகளைச் சீர்குலைக்க ஆயுதப்படையினர் முயற்சித்து வருகின்றமையை தெளிவுபடுத்துகின்றன'' என்று அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடக்கில் நிகழ்ந்த பொலிகண்டிச் சம்பவம், காரைநகர் சம்பவங்களைக் குறிப்பிட்டு இந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

''இராணுவ ரோந்துப்படையினர் மீது நடந்த தாக்குதல்களுக்குத் தமிழ்ப்போராளிகள் மீது அதிகார பூர்வமாகப் பழி சுமத்தப்பட்டாலும் இவ்விரு வன்முறைச் சம்பவங்களிலும் ராணுவப்படைகளே அத்துமீறியுள்ளன பொலிகண்டியில் தமிழ்ப்போராளிகள் அடைக்கலம் புகுந்திருந்ததாகச் சந்தேகிக்கும் ஒரு வீட்டை ராணுவத்தினர் தாக்கினர்என்றும் காரைநகர் பஸ்நிலையத்தில் கடற்படையினரே தாக்குதலை நடத்தினர். இதில் மூன்று தமிழ்ப்பொது மக்களை கடற்படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்'' (அ)

## பூநகரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இப்பொழுது அவ்வேலைகளை நிறுத்தி வைத்துள்ளனராம்.

இராக் காலங்களில் வீட்டுக் கதவுகளைத்தட்டி உட்புகும் ஆயுதப் படையினர் ஆடு, கோழிகளை தங்கள் உணவுத் தேவைகளுக்காக வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டுவதாலேயே அப்பகுதி மக்கள் அச்சமடைந்து அத் தொழிலைக் கைவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது

பூநகரியில் இருக்கும் இரு முகாம்களில் வாடியடியில் இருப்பவர்களேமேற்படிசெயல்களில் ஈடுபட்டு வருவதாகஅப் பகுதி மக்கள் கூறுகின்றனர். (மா)

## காரைநகரில் .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அதிபர் தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரஜைகள்குழு யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தைச் சந்தித்தபோது அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, ரோந்துசுற்றிய கடற்படையினரால் இரு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே (மா)

G. A. Q. — புதிய பிரிவு
B. A. — மீட்டல்
1st in Commerce புதிய பிரிவு
Banking Classes Part II
ஆரம்பம் – 3–8–85
விபரங்களுக்கு:
S. அருள்நங்கை
THE JAFFNA DEGREE EDUCATION CENTRE
சாந்தி சினிமா அருகாமை (மேல்மாடி).
யாழ்ப்பாணம்.
46-7

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# காரைநகர் சீ-நோர் தொழிற்சாலையில் கொள்ளை

[காரைநகர்]

காரைநகர் துறைமுகத்தி லுள்ள சீ-நோர் தொழிற்சாலையில் மீண்டும் பொருட்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை இனந்தெரியாதவர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

பல மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு காரைநகர் சீ-நோர் தொழிற்சாலைக்குள் இரண்டு லொறிகளுடன் உட்சென்ற கோஷ்டி ஒன்று அங்கிருந்து பல பொருட்களை லொறியில் ஏற்றிக்கொண்டு வெளியேறியுள்ளது.

மேற்படி தொழிற்சாலையில் பல தடவைகள் கொள்ளை நடைபெற்றதும், கொள்ளை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாமென கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதிப்பிள்ளை அப்பாத்துரை

திருமதி சரஸ்வதிப்பிள்ளை அப்பாத்துரை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு T. N. அப்பாத்துரை (ஓய்வுபெற்ற தபால் அதிபர் மலாயா) யின் அன்பு மனைவியும், திருமதி சீதாதேவி வைத்திலிங்கம், மகேஸ்வரன் (இயக்குனர் பொதுச்சுற்றுடல் மலாயா), சர்வானந்தன் (விரிவுரையாளர் நைஜீரியா), மகாதேவன் (கணக்காளர் சாம்பியா) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற நீதியரசர் வைத்திலிங்கம், சரோஜாதேவி, ரேகினி, குணலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். இறுதிச்சடங்குகளின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும். 4650

## மரண அறிவித்தல்

### D. C. விக்கிரமரட்ண

D. C. விக்கிரமரட்ண (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பணம்) காலமானர். இவர் நேசரத்தினத்தின் (அரசினர் வைத்தியசாலை, சங்கானை) அன்புக் கணவரும், குணசிறீ, கபிலசிறீ, சுமணசீலி, அமுதசீலி ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெயதாசன் (சவூதி), ஜெயந்தி ஆகியோரின் மாமனருமாவார். அவரின் இறுதிக் கிரியைகள் 24-7-85 (இன்று) புதன்கிழமை காலை 9 மணிக்கு மாதகலில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

மாயவில்லா, மாதகல். 4649

## மரண அறிவித்தல்

### கந்தையா பொன்னுச்சாமி

கந்தர்மடம்—மணல்தறையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் பொன்னுச்சாமி காலமானர். இவர் மனோன்மணியின் கணவரும், குகானந்தராணி, டாக்டர் சுலோசன (லண்டன்), கலாசேகரன் (லண்டன்), இமயகுமாரி (நீர்வழங்கல் வடிகால்சபை), சியாமளா (கடதாசிக் கூட்டுத்தாபனம்), சுகிர்தன் (லண்டன்), ஆகியோரின் தந்தையும், வாமதேவன் (உரிமையாளர், இராசா டீசல் என்ஜினியர்ஸ்), ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), சோமேஸ்வரா லண்டன்) ஆகியோரின் மாமனரும், சுஷாந்தி, சுஷ்ண ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற குமாரசுவாமியின் சகோதரரும், கனகசபாபதி, கனகலிங்கம், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, சற்குணேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரது இல்லத்திலிருந்து வியாழக்கிழமை (24-7-85) பிற்பகல் இரண்டு மணியளவில் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4641 தகவல்: இராசா வாமதேவன்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone, 22389 ,24126,

# பொதுப்பரீட்சை 27ம் திகதி நடக்கும்

(யாழ்ப்பாணம்)

பத்தொன்பதாம் திகதிமுதல் பாடசாலைகள் மத்தியில் நடைபெற்றுவரும். ஆண்டு 12ஆம் வகுப்பிற்கான பொதுப்பரீட்சை 27ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

24ம்திகதி நடைபெறவிருந்த பௌதிகவியல், கணக்கியல் பாடங்கள் 27ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்றும் ஏனைய பாடங்கள் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் தொடர்ந்து நடைபெறும் என்று இப்பரீட்சையுடன் தொடர்புடைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பண்டாரக்குளம் ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை சுந்தரர் குருபூசை இடம்பெறும்.

## வவனியாவில் சைக்கிள் திருட்டு

(வவனியா)

வவனியா நகரில் அடிக்கடி சைக்கிள் திருட்டு இடம்பெற்றுவருகின்றது. பட்டப்பகலிலேயே சைக்கிள் திருட்டு நடைபெறுவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

## கூட்டணி அரசியல் குழு ஆலோசனை

[சென்னை]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல்குழு கடந்த சனிக்கிழமை கூடி இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமை குறித்தும், திம்பு மகாநாடு பற்றியும் எதிர்வரும் 12-ம் திகதி நடைபெறவிருக்கும் பேச்சுக்கள் பற்றியும் ஆலோசித்தது.

அரசியல் குழுவில் மேலும் இருவர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். திருவாளர்கள் வி யோகேஸ்வரன், வி பொன்னம்பலம் ஆகியவர்களே அவ்விருவருமாவர் விசேட உறுப்பினராக திரு. சூசைதாசன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அன்றைய கூட்டத்தில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், எம் சிவசிதம்பரம், ரி சிவசிதம்பரம், கவிஞர் காசி ஆனந்தன் மாவை. சேனாதிராசா, சம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அவுஸ்திரேலிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யகத் தமிழர் வாழ்வுபற்றி ஆராய்ந்துவளார் அவர்களின் பிரஜாவுரிமை பிரச்னைபற்றியும் ஒரு நூலை அவர் விரைவில் எழுதவிருப்பதாகத் தெரிகிறது.


## இன்றுமுதல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குப்படி 'தமிழீழத் தேசிய இராணுவ அமைப்பு'' வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளது

அரசின் நடவடிக்கைகளுக்குப் பலியான அப்பாவி மக்களுக்கும் வீரமரணமடைந்த அனைத்து தோழமைப் போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்துவதாகவும் அப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இன்றும் நாளையும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ்ஈழ அதிரடிப் படையும் 25ம், 26ம் திகதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி 'தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)' சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே. (மா



பூட்டான் தலைநகரான 'திம்பு'வில் இலங்கை இனப்பிரச்னை தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற இடத்தின் வாயில் முகப்புத் தோற்றத்தை படத்தில் காணலாம்.

# நான்கு இயக்கங்களின் முடிவுக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

''அத்தியாவசிய சேவைகளைச் சீர்குலைப்பது தற்கொலைக்கு ஒப்பானது'' என்பதை ஏற்றுக்கொண்டு பொது மக்களைப் பாதிக்கும் அத்தியாவசிய சேவை சீர்குலையக்கூடாது என எடுக்கப்பட்ட முடிவு தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவருமே வரவேற்கின்ற ஒரு முடிவாகும் இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளமை மன ஆறுதலை அளிக்கின்றது. அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உற்சாகத்தையும் தென்பையும் கொடுக்கின்றது இந்த முடிவை எடுத்ததன் மூலம் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் தங்களை அர்ப்பணித்து உழைக்கின்றவர்களுக்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பும் நல்லாதரவும் இருக்கும்.

இவ்வாறு வடபகுதி தேசிய

(9-ம் பக்கம் பார்க்க)

# "மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கிறோம்"

## சென்னையில் பாலகுமார்

(சென்னை)

தமிழ்ப்பகுதிகளில் தமிழ்மக்கள் தாமே எழுச்சியுற்று ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள். தமிழ்ஈழ கோரிக்கையை கைவிடவேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து பொதுமக்கள் நடத்தும் இந்த ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் இலங்கை ஆயுதப்படையினரின் யுத்த நிறுத்த மீறல்களுக்கு எதிராகவும் நடைபெறுகின்றது

இவ்வாறு ஈரோஸ் இயக்கத் தலைவரான திரு பாலகுமார் கருத்து வெளியிட்டுள்ளார்.

மன்னாரில் 'ஈரோஸ்' இயக்கத்தினர் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தியுள்ளார்கள் என இங்கு வெளிவந்த செய்திகளையடுத்தே அவர் மேற்கண்ட கருத்தை கூறினார்.

மக்களின் விருப்பங்களுக்கு மாறாக நாம் நடக்க முடியாது எமது மக்களின் விருப்பத்தை நாம் பிரதிபலிக்கிறோம் அவ்வளவுதான்'' என்று கூறினார் திரு. பாலகுமார்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜினி தேவதாஸ்

திருமதி சரோஜினி தேவதாஸ் காலமானார். அன்னார் திரு. வேதநாயகம் தேவதாஸ் (பிரதம லிகிதர், நவீல்ட் பாடசாலை, கைதடி) அவர்களின் அன்பு மனைவியும், விஜிதா (ய/ திருக்குடும்ப கன்னியர் மடம்], விஜயதாஸ், விஜேந்திரன் (யா/ சம்பத்திரிசியார் கல்லூரி), விஜயராஜ் (சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்ற திரு. சந்தியாப்பிள்ளை நல்லையா (ஆசிரியர்), திருமதி யோகரட்ணம் நல்லையா அவர்களின் அன்பு மகளும்,

திரு. பி. வேதநாயகம், காலஞ்சென்ற திருமதி விவணமுத்து அவர்களின் மருமகளும்

திரு. டன்ஸ்ரன் [London]. பஸ்ரியன் [France], றெமிஜியா, அன்ரன் [London], ஞானம் [London], சான்ஸ் [France] ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

திரு. தேவசகாயம் (உரிமையாளர், நியூ விக்ரேஸ்). எட்மண்டா, கமலா, ஜெயதேவி (லண்டன்), ரூணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னரின் பூதவுடல் (இன்று) புதன் 24-7-85 பி.ப 4 மணிக்கு 27/1, B. M. C, ஒழுங்கையிலிருந்து பலிபூசைக்காக அர்ச் கொஞ்சேஞ்சிமாதா தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, புன்கெஞ்சே ஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 4657